
சிவமயம்

# குமரகுருபரன்



கு. 3122

மலர் 25 ]  1974-௵ சித்திரை ௴ 1-ம் ௳ (14-4-74) [ இதழ் 4

தனிப்பிரதி 45 பைசா  வருடச் சந்தா ரூ 5-00

## ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2 திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்டண்டு கமிஷனர். சென்னை-85

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்


## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அருள்மொழி அமுது | ... 193 |
| 2. | கல்வெட்டுக்களும் திருப்பணிகளும் | ... 198 |
| 3. | பேராண்மை | ... 201 |
| 4. | இறைஅநுபூதிபெற | ... 205 |
| 5. | Towardsgod-Realisation | ... 207 |
| 6 | அழகுதருவன | ... 209 |
| 7 | வாழ்க! குமரன்புகழ் | .... 211 |
| 8 | விபூதிக்கும் லைசென்ஸ்! | .... 212 |
| 9. | தொழும்பு | ... 218 |
| 10. | சிவ முருகா 108 வாழ்த்துப் போற்றிகள் | ... 223 |
| 11. | நவக்கிரக தோத்திரம் | ... 226 |
| 12. | ஸ்ரீ காசியில் குமாரசுவாமி மடத்தில் 72வது அன்னம்பாலிப்பு நிதி ரூ. 1,000- | ... 228 |
| 13 | திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில் நித்திய மகேசுவரபூசை இரண்டாவது உதவி நிதி முதற்பொருள் ரூ. 10,000 | ... 230 |
| 14 | மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை | 46 to 48 |

T-UN-442

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 25 | பிரமாதீச ஞு சித்திரை மீ 1௳ [14-4-74] | இதழ் 4

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

-O-

## 10. அடியார்க்கு அடியவர்

மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்க, இறைவனின் கட்டளையின் படி திருமணக் கோலத்துடனேயே தன்னை உலகம் ஒரு தவவேந்தர் எனக் கூறுமாறு திருவாரூர் இறைவனை அடிக்கடி தரிசித்துப் பாடினார். இது இவ்வாறாக கைலையிலிருந்த அம்மையின் சேடிகளில் ஒருத்தியான கமலினி

என்பாள் திருவாரூரில் பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்னும் நாமம்'' பெற்று வளர்ந்தார். சிவலோகத்திலிருந்து இறங்கி வந்தமையால் பிறந்தார் எனக் கூறாமல் அவதரித்தார் தோன்றினார் எனக் கூறினார். இறைவனையே பதியாக உடையவர்களானதால், திருமணம் செய்து கொள்ளாத பதியிலார் எனக்கூறினார்.

உன்னைப் பிரானாகப் பெற்ற உன்சீரடி யோம்
உன் அடியார் தாள்பணிவோம்: ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவர்; அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும் பாய்ப்பணி செய்வோம்.

*—திருவெம்பாவை-9*

என்ற நிலையில் உள்ளவர்கள். தேவரடியாள் என்னும் தாசி. இதில் தவறான வழியில் செல்லுபவள் வேசி. தாசி வேசியாக மாட்டாள் என்பர் திரு சுப்பராயநாயகர் தம் உரையில். இறைவனுக்குரிய திருவாதிரை நாளன்று பக்திக் கடல் போன்றவள் என்று பரவை எனப் பெயரிட்டனர். அவர் வளரும் காலத்து அவருக்கு தெய்வ பக்தியும் வளர்ந்தது. ஒரு நாள் திருக்கோயிலுக்கு வழிபட வந்தார். அங்கு வந்த சுந்தரரும் பரவையைக் கண்டார். ''கற்பைத் தன்னிடையே கொண்ட பூங்கொம்போ? மன்மதன் அழகிய பெண்களின் இருப்பிடத்தில் தனது வில்வித்தை பயிலுவான். அதுவே அவனது வாழ்வு. காமன் படை கற்பான் வந்தடையும் பெருவாழ்வுக்குரிய இடமா இது? உலகம் செய்த புண்ணியம் செய்த தவத்தின் பயனோ? மேகம் போன்ற கரிய கூந்தலைச் சுமந்து, வில்லொத்த புருவத்தையும், குவளை போன்ற கண்களையும், பவளம் போன்ற உதடுகளையும், மலர் போன்ற மார்பையும், மதி போன்ற நுதலையும் கொடி போன்ற உடலையும் உடைய இவர் யார்? என்ன அற்புதம்? சிவனருள்வழியே வாழும் என்னை மயக்கும் இதுவும் சிவனருளோ?'' என எண்ணினார்.

கற்பகத்தின் பூங்கொம்போ? காமன்தன் பெருவாழ்வோ
பொதுவுடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல்சுமந்து
விற்குவளைப் பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ?
அற்புதமோ? சிவனருளோ? அறியேன் என்று அதிசயித்தார்'

அதே நேரத்தில் சிவபெருமானைத் தவிர வேறு எதையும் அறியாத மனமுடைய பரவை நாச்சியார் சுந்தரரைக் கண்டார். பெருமான் கைலையில் விதித்த கட்டளைதான் இதற்குக் காரணம். அண்டர்பிரான் திருவருளால் அயலறியா மனம் விரும்பப் பண்டை விதிகடை கூட்டப் பரவை யாருங் கண்டார் என்கிறது கவிஞர்பிரான் திருவாக்கு, "முருகப் பெருமானோ? மன்மதனோ? வித்தியாதரனோ? இறைவனருள் பெற்ற பெரியோனோ? என் மனத்தைக் கவரும் இது யார்?" எனச் சிந்திக்கலானார். எனினும் அப்பெரு மாட்டியினது சிவபக்தி காமன் தன்திறத்தையும் வென்றதாதலின், திருவாரூர்ப் பெருமானைச் சேவிக்கும் ஆசையால் கோயிலுள் புகுந்தாள். சுந்தரர் அப் பெருமாட்டியாரெனப் பக்கத்தில் உள்ளவரைக் கேட்க "தேவர்க்கும் கிட்டாத அவ்வம்மையின் பெயர் பரவை நாச்சியார்" என்றார்கள். ("பெயர் பவை (1) பெண்மையினில் பெரு உம்பர் அவை (2) விரும்பல் குலார் பரவு ஐ (3) தேவ சபையிலுள்ள பெரிய அழகிகளும் துதிக்கத் தக்க தெய்வம். அணிதிகழும் மணிமுறுவல் அரும்பர் அவை (4) மூக்கினுள் தொங்கும் முத்துக்களினும் அழகிய முல்லையறும்புகள் போன்ற பல் வரிசையுடையவள். சீர்பரவு ஐ (5) ஆயினள்: இலக்குமியும் விரும்பும் அழகுடையாள் ஏர்பரவு ஐ இடைப் பட்ட (6) எனது போற்றுதலுக்கு உட்பட்ட என் ஆசை எழு பரவை: என் ஆசையாகிய கடல் எழுப்புபவர்.

என்று இப்பாட்டில்தனது ஆசைக்குரியவளாகிய பரவை நாச்சியாரின் பெயரினை ஏழுமுறை வைத்துப்பாடி, என் ஆசையாகிய கடலை எழுப்பிய பரவை எழுபரவை எனக் குறித்த நயம் இன்புறத் தக்கது.

பரவையையே எண்ணியிருந்த சுந்தரர் திருக்கோயிலுள் புக, அவர் கோயிலுள் வருமுன் தன் வழிபாட்டினை முடித்துக் கொண்டு பரவை வேறு வழியாக வீடு திரும்பினர். கோயிலுள் பரவை நாச்சியாரைக் காணாது வெளிவந்த சுந்தரர். "என்னை எந்தவிதமான பாசமும் கட்டாது. பற்றறுக்க வேணுமென்ற எனக்கு ஒரு பற்றுதல் ஏற்பட்டுள்ளதே! இறைவன் திருவடி தவிர வேறு ஒன்றும் அறியாத என்னை ஏதோ மயக்குகிறதே! சிவபெருமான் திருவருள்தான் என்னை மயக்கும். அதுதான் அம்மங்கையின் உருவோ"

என எண்ணி, ஆரூர் இறைவர் அம்மங்கையை எனக்களித்து எனக்கு உயிர் தருவார் என நினைக்க மாலை நேரம் வந்தது. இருட்டு வந்தது: ''வன்றெண்டரே பெண்ணாசையால் வருந்தினால் உலகத்தில் யார் தப்பமுடியும்'' என வந்தது போல் நிலா வந்தது திருநீறு தூயது வெண்மையானது. இன்பம் தருவது, அதுபோல தூய வெண்மையான நிலவொளியில் உலகம் இன்புற்றது ''சிவபெருமானது நுதற்கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதன் என்மீது மலர்க்கணை தொடுப்பதா? எம்பிரானே! இதுவோ உன் கருணை! சந்திரனே! எம்பெருமான் திருமுடியிலுள்ள கங்கையுடன் சேர்ந்து விளங்கும் உன் தண்மை எங்கே? இவ்வாறு என்னைச் சுடலாமா? தென்றற் காற்றே! எங்களது பொதியமலையிலே பிறந்து சோழ நாட்டுத் தடாகங்களின் மீது வீசிய உனக்கு எவ்வாறு வெம்மையான சூடு உண்டாயிற்று?'' என்றெல்லாம் மனம் வருந்தினார் ஆரூரர். பரவை நாச்சியாரும் இதே மாதிரி ஆரூரரை நினைத்து வருந்தினர். திருவாரூர்ப்பெருமான் அடியார்களுக்கு ''பரவை நாச்சியாரை ஆரூரனுக்குத் திருமணம் முடித்து வையுங்கள்'' என்று கூறி 'மங்கை பரவையை உனக்குத் தந்தோம்'' என ஆரூரரிடம் கூறினர். அவ்வாறே மறுநாட் காலையில் ஆரூரர் பரவை நாச்சியாரை மணந்தார். அவரது மாளிகையிலேயே தங்கிவாழலானார்.

தியாகராசப் பெருமானை வணங்கத் திருக்கோயிலுக்கு வந்த ஆரூரர், தேவாசிரிய மண்டபத்திலே குழுமியிருந்த சிவனடியார்களை நோக்கி ''இவர்களுக்கு நான் என்று அடிமையாவது?'' என்று எண்ணிக் கொண்டே கோயிலுள் புகுந்தார். இறைவன் ஆரூரக்குக் காட்சி தந்தார், ஆரூரர் உருகித் திருவடிகளை வணங்கினர், இறைவன் ''ஆரூர! அடியார்கள் நிகரில்லாப் பெருமையுள்ளார். (வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண்! –காரைக்கால் அம்மையார் நம்மைப் பேணுவதால் நமக்குத் தாய் தந்தை போன்றவர். (இறைவனை அடியார்கள் தந்தை தாயராக எண்ணுவது காட்டிலும் இறைவன் கண்ணப்பரை ''அப்பா'' என அழைத்தும் காரைக்கால் அம்மையை ''அம்மா'' என்று அழைத்தும் ஏற்றது மிகச் சிறப்புடையதன்றே?) ஊனடைந்த பிறவியில்

லாதவர். பக்தியின்பம் உடையவர்: இவரை நீ பாடுக'' என்றார், "இறைவனே! ஏதுமறியா இவ்வேழை. இப்பெரியோர்களை எவ்வாறு பாடுவேன்?'' எனக்கூற "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று மறைதந்த திருவாயால் முதலடியெடுத்தளித்தான் ஆரூர் அம்மான். சுந்தரர் வாக்கிலே திருத்தொண்டத் தொகை மலர்ந்து, நம்பியாண்டார் நம்பியின் வாக்கிலே திருத்தொண்டர் திருவந்தாதியாக காயாகி, சேக்கிழார் பெருமான் வாக்கிலே திருத்தொண்டர் புராணமாகக் கனிந்து உலகம் உய்ந்தது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளே சரணம்.

சேக்கிழார் திருவடிகளே சரணம்

— திருச்சிற்றம்பலம் —

உ

சிவ சிவ

**கந்தர் அநுபூதி மூலமும்**

**டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம் அவர்கள்**

M, D . F R C. P. எழுதிய

**உரையும்**

கந்தர் அநுபூதி பெற்று அருணகிரிநாதரால் பாடப்பெற்றது கந்தர் அநுபூதி என்னும் நூல். இது 51 திருப்பாடல்களை யுடையது. இதற்கு அரும்பதவுரையுடன் கூடிய எளிய இனிய பொழிப்புரை டாக்டர் ரத்னவேல் சுப்பிரமணியம் அவர்களால் எழுதி வெளியிடப்பெற்று இரண்டாம் பதிப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. விலை ரூ. 1-00 தபாலில் வேண்டுவோர் ரூ, 1-40 அனுப்பிப் பெறலாம்; இதன் விற்பனைத்தொகை சிதம்பரம் ஸ்ரீமந் நடராசப்பெருமான் ஆலயத் திருப்பணிக்குத் தரப்பெறும்; இந்நூலைப்பெற்றுக் கற்று இருவகைப்பயனும் அடையலாம்.

நூல்கிடைக்குமிடம்:-

**லலிதா கெமிஸ்ட்ஸ் அண்டு டிரக்கிஸ்ட்ஸ்,**

எண். 3. மாணிக்கேசுவரி ரோடு,

சென்னை-10.

# கல்வெட்டுக்களும் திருப்பணிகளும்

திரு K. ஸ்ரீதரன் M. A., அவர்கள்,
6B. நார்ட்டன் முதல்தெரு,
சென்னை–28.

வரலாற்றுப் பெருமை கொண்ட பல திருக்கோயில்களைக் கொண்டது தமிழ்நாடு. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது சான்றோர் வாக்கு.

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித்திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே':

என்று திருமூலர் கூறுகின்றார், ஆகையால் நமக்கு நல்வாழ்வு தரும் இறைவனுக்கு நாட்டை ஆண்ட மன்னர் பலர் கோயில்களைக் கட்டினார்கள். அவற்றில் வழிபாடுகள் நடக்கப் பொருளும், நிலமும் தானமாக அளித்தனர்: ஆனால் நாளடைவில் பல கோயில்கள் காலத்தினால் பழுது பட்டன. இதை உணர்ந்த மன்னர்கள் ஆலயத்திருப்பணிக்காகவும் பொருள் தானமளித்துக் கல்வெட்டுக்களில் பொறித்தனர்.

நமது கலைச்செல்வங்களான ஆலயங்களில் பழுதுபட்டவைகளைத் திருப்பணி செய்ய வேண்டியது நமது கடமையாகும். ஆலயங்கள் பழுதுபட்டுப் பூசை நின்றால்,

''மன்னர்க்குத் தீங்குளவார வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரும் நந்தி எடுத்துரைத்தானே''

என திருமூலர் கூறுகின்றார். அதற்கு ஏற்ப தற்பொழுது பல கோயில்கள் திருப்பணி செய்யப்பெற்று வருகின்றன. திருப்பணிகள் எவ்வாறு செய்யப்பட்டன. அதன் சிறப்பு என்ன என்பது பற்றி பல கோயிற் கல்வெட்டுக்கள் நமக்கு கூறுகின்றன. அச்செய்திகளைப் பற்றி இனி கட்டுரையில் நோக்குவோம்,

முதன் முதலில் கோயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டன. அவைகள் விரைவில் அழிந்துவிடும் தன்மை உடையது

ஆதலால் செங்கற்கோயில்கள் கற்றளியாக்கப்பட்டன. ஆதித்தசோழன் காலத்தில் காவிரியின் இருகரையிலிருந்த கோயில்கள் கற்றளியாக்கப்பட்டன. மேலப்பழுவூர் செங்கற்கோயிலைக் கற்றளியாக்கி 'குலோத்துங்க சோழேச்சரம்' என்று முதற் குலோத்துங்க சோழனின் படைத்தலைவனுன வாணகோவரையன் என்பவன் பெயரிட்டான். முதலாம் இராசராசன் தஞ்சைக்கோயிலை கற்றளியாக கட்டியதை "பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூரில் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ இராசராசேச்சுரம்' என்று தஞ்சைக்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றது. குடந்தை தாராசுரம் கோயிற் கல்வெட்டு 'இராசராசுரம் உடைய நாயனுர்க்கு கோயில் பழுதுபார்ப்பதற்காகவும் விழாக்களுக்காகவும் பொருள் தானமளிக்கப்பட்டது என கூறுகின்றது. திருமழபாடி கோயில் விக்கிரமசோழன் கல்வெட்டும் தில்லைகோயிலைப் புதுப்பிக்கவும், பெரியதாக்கவும் வரிப் பொருளைச் செலவிட்டான் எனக் கூறுகின்றது.

திருப்பணிகள் எவ்வாறு செய்யப்பட வேண்டும் எனவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கோயிற்சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் தரும் பல செய்திகள் நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றுகள் ஆகும். ஆகையால் திருப்பணி செய்யும்பொழுது அவற்றையும் பாதுகாக்கவேண்டும்: அதற்கும் உதாரணமாக, திருவெண்ணெய்நல்லூர் வைகுந்த பெருமாள் கோயில் வடக்கு சுவரில் உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 11-ஆம் ஆண்டு கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது. அக்கோயிலில் முன்னுல் இருந்த ஸ்ரீவிமானம் இடித்துப் புதுப்பிக்கப்பட்டது. அப்பொழுது முன்னுல் விமானத்தில் இருந்த கல்வெட்டுக்களைப் படி எடுக்கச் செய்து மறுபடியும் புதிய விமானத்தில் பொறிக்கப்பட்டது (4809 of 1921) இதை அக்கல்வெட்டில் வரும் "ஸ்ரீ விமானம் இழிச்சி எடுக்கிறபோது படியெடுத்தபடி" என்ற வரியால் அறிந்து கொள்ளலாம். இதைப் போன்ற செய்தியை திருக்கோடிகாவல், திருமழபாடி, திருவிடை மருதூர், ஆடுதுறை, திருவையாறு கோயிற் கல்வெட்டுக்கள் கூறுகின்றன, எனவே இன்று நாம் திருப்பணி செய்யும்

பொழுது கல்வெட்டுக்களின் மீது சுண்ணும்பு, வர்ணம் ஆகிய வற்றை பூசாமல் இருக்க வேண்டியது நமது கடமையாகும்.

தென்காசி விசுவநாதர் கோயில் கோபுரத்தில் உள்ள கல் வெட்டில் அரிகேசரிபராக்கிரம பாண்டியன் கோயிலுக்கு திருப்பணி செய்ய வேண்டிய அவசியத்தையும், நம்முடைய கடமையையும் விளக்கிப் பாடலாக பாடியிருக்கின்ருன்.

''ஆராயினு மிந்தத் தென் காசி மேவும் பொன்னுலயத்து
வாராததோர் குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை
நேராகவே யொழித்துரைப்பார்களை நீதியுடன்
பாரரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே''

(இக்கோயிலுக்கு ஏதாவது குற்றம் வந்தால் அதனை நீக்கி இக்கோயிலை போற்றிப் பாதுகாப்பவர்களை, யான் உலகத்தில் உள்ளவர்கள் அறியும்படி பணிந்து வணங்குகிறேன் என்று கூறுகின்ருன்,)

ஆகவே திருப்பணி செய்வதின் அவசியத்தை உணர்ந்த திருநாவுக்கரசர் பெருமான் உழவாரப்படைக்கொண்டு தாம் செல்லும் திருத்தலங்களில் முளைத்த செடி, கொடிகளை அகற் றித் தூய்மை செய்து ஆலயத்தைப் பேணிக்காக்கும் திருத் தொண்டைச் செய்தார். அப்பர் பெருமானின் திருநட்சத் திரம் சித்திரை மாதம் வருகின்றது. இச்சதயத் திருநாளில் நாமும் உழவாரப்படை கையிலேந்தி ஆலயத்திலும், மதிற் சுவர்களிலும் இருக்கின்ற. ஆலயத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற செடி கொடிகளை அகற்றித் தூய்மை செய்தும், இறைவனைப் போற்றியும் பேறுகள் அடைவோம்.

# "பேராண்மை"

திரு. த. பி. ஆறுமுகம் எம். ஏ. அவர்கள்,
*தமிழாசிரியர் ம. தி. தா. இந்துக்கலாசாலை, திருநெல்வேலி-1*

---

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ள அனைவரும் மனிதர் ஆகிவிட முடியாது. மனிதனைப் பிறந்துள்ள ஒவ்வொருவரும் கடைப்பிடித்தற்குரிய நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து, கற்றற்குரிய நூல்களைக்கற்று, வசையொழிந்து, இசையோடு வாழ்பவரே மனிதராவார். இவ்வாறு வாழும் வாழ்வு முறையிலிருந்து வழுவி, போற்றா ஒழுக்கங்களைக் கைக்கொண்டு, இசை கெட்டு, தீராத வசையோடு வாழ்பவர் மனித உருவில் திரியும் விலங்காவர். உலகத்தாரால் போற்றப்படாத ஒழுக்கங்கள் பல. அவற்றுள் பிறர் மனை நயத்தலும் ஒன்றாகும். பிறனில் விழையும் பேதமையைச் சாடாத இலக்கியங்களே இல்லை என்று துணிந்து கூறலாம். பிறரது மனைவியை விரும்பிச் செல்வது அறமுமன்று; ஆண்மையுமன்று என்பதனைக் காலந்தோறும்தோன்றியஇலக்கியங்கள் எல்லாம் வலியுறுத்திச் சொல்லுகின்றன.

> "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
> உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவம்.

வள்ளுவர் தமது கருத்தை எப்பொழுதும் விதிமுகத்தானும், எதிர்மறை முகத்தானும் வலியுறுத்திச் சொல்வதைக்காணலாம். 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்தில், ஒழுக்கத்தின் இன்றியமையாமையை விதி முகத்தான் வலியுறுத்திச்சொல்லும் வள்ளுவர், அதற்கு அடுத்த அதிகாரத்திலே 'பிறனில் விழையாமை' (அறத்துப்பால்-அதிகாரம் 15) என்ற அதிகாரத்தில், பிறனில் விழைவது தலையாய ஒழுக்கக் கேடு என்பதனை வலியுறுத்துவதன் மூலம், ஒழுக்கத்தின் சிறப்பினை வலி

யுறுத்துகின்றார் எனலாம் பிறரது மனைவியை நாடுவார்க்கு பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கும் வந்து சேரும் என்பதனை மிக அழகாகக் கூறுகின்றார் இதனையே வள்ளுவர்,

''பகை பாவம் அச்சம் பழி என நான்கும்
இகவாவாம் இல் இறப்பான் கண்'' என்கிறார்.

எத்துணைச் சிறப்புடையவராயினும், பிறர் மனை நயத்தல் என்னும் இழி செயலை மேற்கொள்ளுவான் ஆயின், அவன் பெற்ற இதர சிறப்புக்களும், பெருமைகளும் அழிந்தொழிவ தோடு, தீராப் பழியும் வந்து சேரும் என்பதனைப் பத்துப் பாடல்களில் மிகவும் வலியுறுத்திச் சொல்லுகின்றார்.

ஆண்மைத் தன்மையே ஆடவரின் சிறப்பு. மிகவும் போற்றுதற்குரிய ஆண்மை எனப்படுவது பிறர்மனை நோக்காத தன்மையே ஆகும். இதனையே வள்ளுவப் பெருந்தகை ''பேராண்மை'' எனக் குறிப்பிடுகின்றார். இத்தகைய பிறன் மனை நோக்கா பேராண்மையுடையவரே சான்றோர் எனப் படுபவர் ஆவர். இதனையே பொய்யாமொழி,

'பிறன்மனை நோக்காத பேர் ஆண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு''

என்று கூறுகின்றது.

பிறர்மனை நயத்தலால் வரும் கேட்டினை, இதிகாசங்கள், புராணங்கள், வரலாறு முதலியன நமக்குக் காட்டுகின்றன. இந்திரன், கௌதமர் மனைவியாகிய அகலிகையை விரும்பித், துன்பத்தினையும், தீராப் பழியையும் எய்தியதையும்; சந்திரன், தனது ஆசிரியராகிய பிருகஸ்பதியின் மனைவியாகிய தாராவை விரும்பி, நீங்காப் பழியையும், அவமானத்தையும் அடைந்துள் ளதையும் நாம் நன்கறிவோம். இலங்கை வேந்தன், இராவ ணன் பல்வகைச் சிறப்புக்களை உடையவனுயிருந்தும், பிறர் மனை நயத்தல் என்னும் அளற்றில் வீழ்ந்ததாலன்றோ, தனக்கு அழிவைத் தேடிக் கொண்டதோடு, அவனது இசை கெட்டு, வசைபட்டு அவன் புகழ், பேசப்படுகின்றது. இழுக் கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாய் இவர்கள் திகழ்கின்றனர். வள்ளுவர் இடித்து ரைத்ததைப் போலவே பதினேழாம் நூற்றாண்டில், தன்னி

கரில்லா புலமைச் செல்வராய் வாழ்ந்த குமரகுருபர சுவாமிகளும் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார்.

பிறர் மனை விழைதல் அறமன்று; அச்செயலைச் செய்பவர் அறமல்லாத செயலைச் செய்வதோடு, உடலும், உள்ளமும் கெடத் தீராத நோயை அடைவர் என்பதாம்; இன்பம் பெறுதற் பொருட்டு பிறர் மனையை விரும்பும் அப்பேதையர் தான் விரும்பும் இன்பத்தைச் சிறிதளவும் பெறமாட்டார்கள்; யாருக நிலைத்த துன்பத்தையும், பழியையும் பெறுவர் என்பதனையும் மிக அழகாகச் சுட்டிக் காட்டுகின்றார். அவரது பாடலைக் காண்போம்.

''பிறன் வரை நின்றாள் கடைத்தலைச்சேறல்
அறனன்றே யாயினுமாக—சிறுவரையும்
நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே
மெய்ந் நடுங்க வுண்ணடுங்கு நோய்''

—நீதிநெறிவிளக்கம்–பாடல்:76.

தன்னுடைய மனைவி திருமகளைக் காட்டிலும் உருவிலும், திருவிலும் அழகு மிக்கவளாய் இருப்பினும், அற்பர் சிலர் தம் குலப்பெருமை கெட, மனிதப் பண்பை–தன்மையை இழந்து, பிறனில் விழைந்து விலங்குத் தன்மையினை அடைவர் என்று கூறுகின்றார். இனிமையான, சுவையுடைய இரை வாயினிடத்தே இருப்பினும் சில விலங்குகள் கடுக்காய் போன்ற சுவையற்ற வற்றை நாடிச் செல்லும் இயல்புடையன இவ்விலங்கினைப் போன்ற தன்மையரே, நன்மனையாள் இல்லிலிருக்க பிறர் மனை நயக்கும் பேதையர் என்பதனை அடிகள் கீழ்வருமாறு கூறுகின்றார்.

திருவினு நல்லாண் மனைக்கிழத்தியேனும்
பிறன் மனைக்கே பீடழிந்து நிற்பர்—நறுவிய
வாயின வேனுமுமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர். நீதிநெறி விளக்கம் பாடல்: 79;

இவ்வாறு பிறர் மனையையே பெட்டு ஒழுகும் பேதையர் சிற்றின்பமே பெரிதெனக் கருதி, முறையற்ற காமத்தின் வயப்பட்டு, எத்தகைய இழிசெயலைச் செய்யவும் அஞ்சமாட்டார்கள்; தம் செயலுக்காக நாணவும் மாட்டார்கள் குடிப் பெருமை, மானம் இவற்றைக் காக்க மாட்டார்கள்; என்று

அடிகள் ஆண்மையற்ற அறிவிலிகளின் இயல்பினை எடுத்து ரைக்கின்றார்.

பிறர் மனை நோக்காப் பேராண்மை படைத்த மாந்தரை இவ் வையம் சான்றோர் என உரைக்கும். இலக்கியங்களும் இத்தகைய பேராண்மை மிக்க சான்றோரைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இலக்கியம் சுட்டுகின்ற காட்சியுள் ஒன்றினைக் காண்போம்.

'தலைவி ஒருத்தி தன் காதலனுடன் சென்று விட்டாள், தலைவி சென்றதை யறிந்த செவிலித்தாய், மனம் வருந்தித் தலைவியைத் தேடிச் செல்கின்றாள். செல்லும் வழியில் உள மொத்த காதலர் இருவர் சேய்மையில் வருவதைக் காண்கின்றாள். அவர்கள் வருவதைக்கண்ட செவிலி, தன் மகளும் அவள் காதலனும் வருவதாக எண்ணுகிறாள். அண்மையில் வந்தவுடன், அவள் தனது மகள் அல்லள் என்பதனை அறிகின்றாள். இருந்தபோதிலும், அத்தலைவனிடம், 'உங்களை ஒத்த தன்மையர் இருவர் சென்றதைக் கண்டீரோ?' என வினவுகின்றாள், செவிலி உடனே, தலைவன், 'என் போன்ற, சிங்கத்தின் தன்மையினை உடைய தலைவன் ஒருவன் என் எதிரே சென்றதைக்கண்டேன். ஆனால், அவனுடன் சென்றவள் இன்னாள் என்பதை அறிகிலேன். அவள் யாரென்பதை தன் தலைவியிடம் கேட்டுச் சொல்வதாகக் கூறி, தலைவியை நோக்கி "தூண்டா விளக்கனை யாயென்னையே அன்னை சொல்லியதே" எனவினவுகின்றாள் பிறர் மனையை நோக்காத பேராண்மை படைத்த அத்தலைவனின் கூற்றினைக் காண்போம்.

'மீண்டாரென உவந்தேன் கண்டு
நும்மை யிம்மே தகவே
பூண்டாரிருவர் முன் போயின
ரே புலியூரெனை நின்
றாண்டான் அருவரை ஆளியன்
னானைக் கண்டே னயலே
தூண்டா விளக்கனையா யென்னை
யோ அன்னை சொல்லியதே'.

மாணிக்க வாசகர் அருளிச் செய்த திருக்கோவையாரில் இத்தகைய பிறன்மனை நோக்காத பேராண்மையாளனைக் காண்கின்றோம். இதுவன்றோ பேராண்மை! பிறர் மனையை நோக்காத் தன்மையே பேராண்மை எனச் சொல்வது மிகப் பொருத்தமன்றோ!

(சிவசிவ) (சிவசிவ)

# இறை அநுபூதி பெற

(சிவசிவ) (சிவசிவ)

(திரு. சுவாமி இராமதாஸ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதியது. கட்டுரை உதவியவர் திரு: வி. என். ஆறுமுகம் அவர்கள்)

---

இறை அநுபூதி பெறச் சாதனம் வழிகோலும். இது சாதராண மனிதனுக்கும்கைகூடுவது ஒன்ருகும். அதில் இரு பகுதிகள் உண்டு: (1) மானதக் காட்சி (2) புறநிலைக் காட்சி.

மானதக் காட்சிக்கு இறைவனின் திருநாமம் உதவுவது போன்று வேறெதுவும் இல்லை. திருநாமம் மோட்சத்துக்குரிய மருந்தாகும். அது தேவாமிர்தமும் ஆகும். அது மனத்தை இறைவனேடு ஒரு நொடியில் இணங்கச் செய்யும். உலகப் பொருள்களினிடத்துப்பற்றுமிகுதியாகஇருப்ப ர்கட்குஅதன் இனிமையை நுகர முடியாது பிறவிப் பிணியில் அழுந்தியிருப் பவரும் அங்ஙனமே ஆவர். இறைவன் திருநாமத்தை ஓதுவது மிகவும் எளியது. அதற்கு எந்தவிதமான வெளிப்பகட்டான காரியங்களும் வேண்டியதில்லை, திருநாமம் ஒன்றே போது மானது.

ஒருவர் தொந்தரவுக்கு உள்ளதாக நேரம் எதுவோ அந்த நேரத்தில் சுகாசனத்தில் நிசப்தமான இடத்தில் அமர்ந்து அரை மணி நேரமாவது திருநாமத்தை உச்சரிக் கலாம். பின்னர்க் கால்மணிநேரம் தியானத்துக்கு ஒதுக்கலாம் முடியவில்லையே என்று ஏதாவது காரணம் கூறுதல்வேண்டா நாடோறும் இடையருது இங்ஙனம் செய்தால் எவ்வளவோ நன்மை பயக்கும். பிற சமயங்களிலும் நேரம் இருக்கும் பொழுதெல்லாம் இங்ஙனமே செய்யலாம். முன்னர்ப் பகுத் துக் கொண்ட 8/4மணி நேரத்தை எந்தக்காரணம் கொண் டும் வீணுக்குதல் கூடாது. 45 நிமிடங்களுக்குப் பிறகு உடம்பை மறந்து இறை அநுபவத்தில் இருத்தல் கைகூடும்.

தியானம் என்பது இறைவனது குணுதிசயங்களில் தங்கி யிருத்தலே ஆகும். அவன் சச்சிதானந்த சொருபி. அவன்

மனத்துள் இருக்கின்றான்; புறம்பும் எங்கும் வியாபித்து இருக்கின்றான்; ஆழ்ந்த தியானம் ஆனந்தத்தில் கொண்டு உய்க்கும். அந்த மேலான நிலையிலிருந்து பின் இறங்கி விடுவது நேரிடும். எனினும் அத்தகைய அநுபவத்தைப் பழக்கத்தினால் நாள் முழுவதும் நீடித்து நிலையாக இருக்கச் செய்யவியலும்.

உணவு உண்ணுதலைக் கட்டுப்படுத்துவது தியானம்செய்வதற்கு உறுதுணையாக இருக்கும். சாத்விகமான குறைவான அளவு உணவு கொள்ள வேண்டும் அது சாத்துவிக குணங்களை வளர்ப்பதுடன் மனத்தை ஒருவழிப் படுத்தப் பெரிதும் உதவும்.

தியானம் ஜபம் ஆகியவற்றுடன் உலகமே ஈசுவர சொரூபம் என்பதை அறியப் பழக வேண்டும். எண்ணங்களெல்லாம் இறைவனின் வியாபகத்தைக் காட்டுவன ஆகும். சமுதாயம், சமுதாயச் சீர்திருத்தம் போன்றவைகளைப் பற்றிக் கவலை எடுத்துக்கொள்ள வேண்டாம். எல்லாரையும் கடவுள் என்றே கருதி அன்பு காட்டி அவர்கட்குத் தொண்டு செய். எவன் ஒருவன் "நான் கடவுளை நேசிக்கிறேன்" என்று மட்டும் கூறுகிறானோ அவனை நம்பாதே. எங்கும் எல்லாப் பக்கங்களிலும் நீ கடவுளுடனே தான் இயங்குகிறாய்.

எல்லா இயக்கங்களையும் எல்லாச் செயல்களையும் கடவுளின் இயக்கங்கள் செயல்களாகவே கருதுக. பிரபஞ்சம் முழுவதும் இறைவனது வியாபகம் ஆகும். இரு, இயங்கு, கடவுளுக்குள் தங்கு. எல்லாமும் இறைவனின் ஆணையின் படி நடக்கிறது என்று அறியுமாறு மனத்தைப் பழக்கிக் கொள்.

இறை அறிவு மனத்தில் நிறைந்து இருத்தல் வேண்டும். தியானத்தில் நீ என்ன காண்கிறாயோ அனுபவிக்கிறாயோ அதனையே புற உலகத்தில் நீ கண்டாலும் அநுபவித்தலும் உண்டு. இதுவே தெய்வ உணர்வுக்கு வழி கோலும்.

பின்னர் உன் வாழ்க்கை இன்பவெள்ளம் போல் பெருக்கெடுக்கும் பிறகும் இவ்வெள்ளத்தில் திளைத்துப் பயன் பெறுவர். அப்பொழுது நீயும் மன்பதைகட்கு வாழ்வு தருவாய்.

# TOWARDS GOD-REALISATION

By

Swami Ramadas

Sadhana is effort made towards God-realisation. It is possible for the average man i. e.. the man in the world also. It has two aspects:- (1) inner communion (2) outward vision.

For inner communion, there is nothing so helpful as the divine Name. The Name is a pill of bliss. It is a dose of nectar. It links the mind with the Supreme Being in no time. Only those minds which are deeply attached to worldly objects cannot enjoy its sweetness. When you have fever, sugar does not taste sweet, Similarly when one is suffering from the worldly disease (bhava-roga) one cannot enjoy its sweetness. Repetition of the Name is so simple and easy. There is no need for any ceremonial, no external aid, no paraphernalia, no rules The Name is self-sufficient.

Choose a time when you are not likely to be disturbed. Sitting comfortably in a quiet place repeat the Name for half an hour. Let this be followed by meditation for quarter of an hour. Let nothing come in the way of this daily practice. Never plead excuses. Regular and systematic practice will take you a long way. Even at other times, whenever you are free, repeat the Name. But never let go the three-fourths of an hour in vain. At the end of this fortyfive minutes you should be in that blissful state when you forget your body - consciousness

Meditation means dwelling on the attributes of the Supreme Being. He is Sat-Chit-Ananda. He is

in you, outside you and every where. Deep meditation leads you to a state of ecstasy. You may come down after meditation but by practice you may be able to keep that consciousness throughout the day.

One thing which specially assists the practice of meditation is regulation of diet. Light satwic food must be taken in moderate quantities. This will develop not only Satwic qualities of the mind but will also aid concentration.

Side by side with meditation and repetition of the Name, you should also practise looking upon the world as manifestation of God. Even your thoughts are movements of God. Do not trouble yourself with notions of nationality, social reform and things of that kind. Let all differences disappear. Love and serve every body as God. He who says that he loves God and not his fellowmen can never be believed. Every where, on all sides, you move with God.

Next, look upon every movement, every activity as movement of God. The entire universe is nothing but manifestation of God. Live, move and have your being in God. Tutor the mind to see that everything happens by the will of God.

God–idea must permeate you to the core of your heart. What you see and realize in meditation, you also see and realize in the out side world. The one is unmanifest, the other manifest. This leads to Cosmic Consciousness.

Then your life flows like a river with joy and many others will be benefited by coming in touch with this flow. You will be a blessing to humanity.

# அழகு தருவன

திரு. வி ஜி. சீனிவாசன் அவர்கள்,
மதுரை-1

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் – மாறில்
உடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

இப்பாடல் அவ்வைப் பிராட்டியார் அருளிய 'நல்வழி'ப்பாடல் களிலே இருபத்து நான்காவது மணியாகும்.

சைவ நன்மக்களது நெற்றிக்குப் பொலிவு தருவது திரு நீறு, உணவுக்குச் சுவை சேர்ப்பதுநெய்; ஊர் ஒன்றுக்கு அணியாய் அமைவது நீரோட்டமுள்ள யாறு; ஒருவன் தான் உடம்பெடுத்த தன்மைக்கு அழகூட்டுவது கருத்து மாறு பாடில்லாத உடன்தோற்றல்கள் 'ஸஹோதரம்' ஆனவர்கள் (ஸஹ உதரம்-உடன் வயிறு. 'பிறப்போரன்ன உடன்வயிற் றுள்ளும்' எனப்புறநானூறு பகரும்) வீடொன்றினை மனை எனத் திகழவைப்பது 'மனை'வி; இல்லொன்றை இலங்கவைப் பது 'இல்லாள்' இல்லாள்–மனைவி! இல்லான்–வறியவன், தரித் திரன்' ('இல்லானை இல்லாளும் வேண்டாள்' நினைவுக்கு வர லாம்) ஆங்கிலத்திலே 'ஹௌஸ்' (House) ஒன்று 'ஹோம்' (Home) ஆவது வாழ்க்கைத் துணைவி பற்றியே!

மேற்குறித்த பாடலை மூவர் ஆங்கிலத்திலே பெயர்த் துள்ளனர். அவற்றைக் காண்போம்.

1. Destitute of perfection is the fore-head on which the sacred ashes are not nibbed: destitute of taste is the food not enriched by clarified butter: de stitute of beauty is the country in which there are no waters; destitute, also, is he who hath no brethren;

but above all destitute is the house in which no tender vine flourisheth tie which hath no mistress)

இம் மொழி பெயர்ப்பைச் செய்தவர் திரு எஃப் டபிள்யூ எல்லிஸ் என்ற ஆங்கிலேயர்; செய்த ஆண்டு 1813.

2. The face without 'vibhuthi' is wretched,
Wretched is the food without ghee;.
And so is a village without a river.
Bereft of beauty.
That man is wretched who is not blest.
With brothers, constant in joy and sorrow;
And wretched certainly.
Is a home without a woman,

இம்மொழி பெயர்ப்பினைச் செய்தவர் திரு சி. ராஜ கோபாலாச்சாரியார் (ராஜாஜி); செய்த ஆண்டு 1920

A forehead without sacred ashes is graceless; food without ghee is useless: a city without a river is devoid of beauty; the body of him who has not noble minded brothers and sisters is unlovely; and in utter ruin is a house without a wife

இம்மொழி பெயர்ப்பினைச் செய்தவர் திரு தி. பொ. கிருஷ்ணசாமி முதலியார்; செய்த ஆண்டு 1937.

அவ்வையார் பாடலின் கருத்துக்களைப் பரப்ப அரிய ஆங்கிலத்தைக் கையாண்டு வேறு சிலர் பெயர்த்திருக்கலாம். என் கண்களுக்குப் படவில்லை; அவ்வளவே!

சிவ சிவ

# வாழ்க! குமரன் புகழ்

**செல்வி, உஷாதேவி அவர்கள்**
[இளங்கலை–இறுதியாண்டு] புதுவை–7.

குன்று தோறும் ஆடிவரும் குமரன் வாழ்கவே!
கும்பிடும் உள்ளம் வாழும் குகனும் வாழ்கவே!
ஆறுமுகம் கொண்டிருக்கும் ஆறுமுகன் வாழ்கவே!
ஆலயத்தில் கோயில் கொண்ட அரசன் வாழ்கவே!

மயிலேறி ஊர்ந்து வரும் மகிழ்நன் வாழ்கவே
மயக்கம் போக்கும் வேலுடைய வீரன் வாழ்கவே!
அரசன்போல ஆண்டு வரும் முருகன் வாழ்கவே!
ஆண்டிபோல கோலங் கொண்ட அழகன் வாழ்கவே!

கூவுகின்ற சேவல் கொண்ட கொடியோன் வாழ்கவே!
கூத்தாடும் வேதத் தலைவன் புதல்வன் வாழ்கவே!
குற்றமற்ற உள்ளங் கொண்ட குறும்பன் வாழ்கவே!
குறமகளை மணந்து கொண்ட நாதன் வாழ்கவே!

தேவமகளை வதுவை புரிந்த தலைவன் வாழ்கவே!
தேறுதலை யள்ளி வழங்கும் வள்ளல் வாழ்கவே!
இடரினையே யழித்து நிற்கும் இடும்பன் வாழ்கவே!
இளையவனும் குமர குருபரன் என்றும் வாழ்கவே!

கார்த்திகையாள் வளர்ப்புப் பிள்ளை வாழ்க வாழ்கவே!
கார்த்திகேயன் நாமம் என்றும் எங்கும் வாழ்கவே!
வேங்கைமர உரு எடுத்த கந்தன் வாழ்கவே!
வேதம் படைத்த நாயகனின் வேதகுரு வாழ்கவே!

அடியவர்கள் மனதினிலே அன்பன் வந்து வாழ்கவே!
அன்புதனைத் தந்தருளும் இனியன் புகழ் வாழ்கவே!
கள்ளமிலா உள்ளம் என்றும் எங்கும் வாழ்கவே!
களங்கமிலா எந்தன் மனதில் என்றும்நீ வாழ்கவே!

# விபூதிக்கும் லைசென்ஸ்!

திரு. அருணகிரிதாசன் P. S இராமமூர்த்தி அவர்கள்,
டால்மியாபுரம். [திருச்சி மாவட்டம்]

மிகவும் ஆழமாகவுள்ளது; பாழடைந்து விட்டது; நீர் இல்லை யென்று நினைத்து தன் வீட்டுக்குப் பின் புறமுள்ள கிணற்றைப் பற்றிச் சிந்தனை செய்யாமலே இருந்தார் ஒருவர். கிணற்றைப் பயன்படுத்த பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் முயன்றார். கிணற்றின் அடிப்பாகத்தில் தண்ணீரையும், நீரின் நடுவில் சயனித்துக் கொண்டிருக்கும் சண்முகப்பெருமானின் பொற்சிலையையும் பக்கத்து வீட்டுக்காரர் பார்த்தார்! கிணற்றிற் குரியவர் கடவுட் சிலையைக் காணமுடியாத காரணம்.... ...............முயற்சியின்மையே!

சிந்திக்கத் தெரியாத சமய விரோதிகளின் நிலையும் இப் படித்தான்!

நம் மதத்தின் உயர்ந்த தத்துவங்களைச் சரிவர புரிந்து கொள்ள இயலாத சில மூடர்களே நம் சமயத்துக்கு மாசு கற்பிக்கிறார்கள்; அழிவைத் தேடுகிறார்கள் என்றால் மிகையாகாது, "உலகமக்கள் உய்வு பெற உங்கள் இந்து மதம்தான் நல்ல வழிகளைக் காட்டுகிறது!" என்று கூறி பக்கத்து நாட்டுக்காரர்கள் ஆன்மீக அறிவு பெற தமிழ்நாட்டிற்கு வந்த வண்ணமிருக்கிறார்கள் என்றால் மூடர்களின் முட்டாள்தனத்தைக் கண்டு நாம் வெட்கப்படவேண்டியது தான்! இந்த அவமானச் சின்னங்களெல்லாம் என்று தன்மானச் சின்னங்களாக மாறுமோ அன்றுதான் நம் நாடு உருப்படும்; உலக மக்களிடையே நாம் கலாச்சாரத்துறையிலே தலை நிமிர்ந்து நடைபோடலாம்!

"இந்துமதக் கொள்கைகளின் புனிதத் தன்மையையும் மண்டிக்கிடக்கும் உயர்ந்த உண்மைகளையும் நன்கு அறிந்து

உணர்ந்து உலக மக்களிடையே பிரசாரம் செய்யப்போகி றேன்'' என்றுரைத்துஆன்மீக அறிவு பெறத் தமிழ் நாட்டிற்கு வந்திருக்கும் கிரேக்க நாட்டு முன்னுளைய அரசியார்; நம் இந்து சமயத்தைப் பற்றி உதிர்க்கும் கருத்துகள் இந்துக் குரு டர்கள் சிலரின் கண்களைத் திறந்து விடுமென்று நம்பலாம். நாமும் பெருமைப் படுகிறோம்.

நம் உயர்ந்த இந்துமத கலாச்சாரம் பற்றி கிரேக்க அரசி யார் பிரடெரிக்கா கூறுவது:—

''இந்தியாவின் மீதும் அதன் தத்துவ சாஸ்திரங்கள் சிந்தனை, கலாச்சாரங்கள் மீதும் பற்றுக் கொண்டு விட்டேன். இந்தியாவிற்கு நான் வந்தது ஏன் என்று நினைப்பீர்கள்! உங்களிடம் என்ன இருக்கிறது என்று உங்களுக்கே தெரியவில்லை! அத்துவைத சித் தாந்தம் உலகிலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது! விடு தலைக்கு வழி அது ஒன்றே!''

''உலகிற்கு அளிப்பதற்கு இந்தியாவிடம் உண்மைப் பொருள் இருக்கிறதென நான் நம்புகிறேன். மேல் நாடுகளைப் பின்பற்றும் மோகத்தை இந்தியர்கள் விட்டுவிட வேண்டும் ஆன்மிகம் விளையும் இந்து மதச் சிந்தனையைப் பயின்று ஆறுதல் பெற இப் போது வந்திருக்கிறேன். மேற்கத்திய சமுதாயங் களில் வேர்விடத் துவங்கியிருக்கும் ஆசாபங்கங் கள், சீர்கேடுகள் ஆகியவற்றுக்கு நடமாடும் சின் னங்களாக இருக்கிறார்கள் ஹிப்பிகள்!''

சமயக் கொள்கைகளை யறிந்து கொள்ள முயலாது சம யத்தைச் சாடும் சில சமய விரோதிகளுக்கு அரசியாரின் கூற்று ஓர் சம்மட்டி அடியென்றே கூறலாம்.

''உங்களிடம் என்ன இருக்கிறது என்று உங்களுக்கே தெரியாது!'' என்ற கிரேக்க அரசியாரின் இடித்துக் கூறும் மொழிகளைக் கேட்ட மத விரோதிகள் தலையில் முக்காடு இட் டுக் கொள்வதைத்தவிர வேறு வழி காண முடியாது!

கிரேக்க அரசியாரின் அரிய கூற்றுகள் சமய விரோதிகளின் கொடுஞ் செயல்களுக்கு ஒரு 'பிரேக்' காக அமையட்டும்!

"உலக மக்களிடையே நம் கலாச்சாரமே தலைசிறந்ததாகவுள்ளது; அதற்கு உலைவைத்து விடாதீர்கள்" என்று உலுத்தர்களுக்கு எச்சரிக்கை விடுத்த மதிப்பு மிக்க தமிழக கவர்னர், நம் கலாச்சாரம் பற்றி கூறிய கருத்துகளை கீழே காணலாம்:—

> 'மேல் நாடுகளைப்பின்பற்றி வாழ்க்கை வசதியைப் பெருக்கிக்கொள்ளும் பரபரப்பில் நமது நாட்டின் அடிப்படைக் கலாச்சாரத்தையும் பண்புகளையும் கைகழுவக் கூடாது. அமெரிக்கா முதலான மேனாடுகளில் வாழ்க்கை வசதிகள் அபாரமாகப் பெருகின. அதற்கேற்ற வேகத்தில் அறவொழுக்கமும் இறை உணர்வும் வளரவில்லை!"
>
> "அமெரிக்கர்கள் தெய்வபக்தி, ஆன்மீகம் முதலியவைகளை நாடி நமது நாட்டுப் பரம்பரைச் செல்வங்களாகிய அவற்றை அடைய விழைகிறார்கள். ஆனால் அவர்கள் மறக்க விரும்பும் தீமைகளை நவின நாகரீகமென்று கைக்கொள்ள விரும்புகிறோம். மேனாட்டுப் 'பாப்' சங்கீதம் மனப் பதட்டத்தையே தூண்டுகிறது. நமது பக்திப் பாடல்களோ மன அமைதியையும் ஆனந்தத்தையும் வளர்க்கின்றன!"

மதிப்பு மிக்க தமிழக கவர்னரின் பொருள் நிறைந்த அறிவுரைகள் மதவிரோதிகளின் மனக்கண்களைத் திறந்து விடுமா...! சற்று பொறுத்திருந்தே பார்ப்போம்,

நம் கலாச்சாரங்கள் பற்றி நல்லோர்கள் வாயிலாக அறிந்தோம். மகிழ்வெய்துகிறோம். ஆனால் மதாபிமானம் கொண்டவர்களின் மனம் புழுங்கும் படியான சில சமய விரோதச் செயல்களும் ஆங்காங்கே நிகழ்கின்றன, மகிழ்வெய்துகிற நாம் வருந்தவும் வேண்டியிருக்கிறது.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியொன்று வாசகர்களின் சிந்தனைக்கு வைக்கப்படுகிறது.

"......மதுரையிலுள்ள அதன் அலுவலகங்களில் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கும் கடவுளர் படங்களை அகற்றும்படி உத்தரவிட்டுள்ளது! அதையடுத்து புக்கிங் ஆபீஸிலுள்ள சில லட்சுமி, சரசுவதி படங்கள் சில தினங்களுக்கு முன் அகற்றப்பட்டன!"

இது இந்தச் செய்தி எந்த அளவுக்கு உண்மை என்று கூற இயலாது, ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைபடுத்திஆட்சி புரிந்த காலத்தில் கூட, அரசு அலுவலகங்களில் கடவுளர்களின் திருஉருவப்படங்கள் இருந்ததாகவும் அவைகளுக்கு பூசை முதலியன நடைபெற்றதாகவும் பெரியோர்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது. சில அரசு அலுவலகங்களில், ஆங்கிலேயர்கள், சிறுகோயில்களைக்கூட எழுப்ப அனுமதித்ததாக நாம் கேள்விப்படுகிறோம். இன்றுகூட சில பள்ளிகளிலும் நகரசபைகளிலும் திருக்கோவில்கள் விளங்குவதைநன்கு காணலாம்.

மேலே கூறப்பட்ட செய்தி உண்மைச் செய்திதான் என்றால் மதாபிமானமும் தெய்வ நம்பிக்கையும் கொண்ட மக்களின் வருங்காலம் எப்படி அமையும் என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

மத்திய, மாநில அரசுகள் சமயச் சார்பற்றனவாக அமைந்துள்ளன. ஆனால் மக்களில் பெரும்பாலோர் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாக உள்ளனர், மேலே வழங்கப்பட்ட செய்தியை உன்னுங்கால் மக்களும் மதச்சார்யற்ற அரசுக்கு ஏத்தாற்போன்று செயல்பட வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்து விடுமோவென்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கும், சமயச் சார்பற்ற கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற நிலைமை, ஏற்படலாம். அதற்கேற்ப மதச்சார்பற்ற அரசு சில கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

அந்தப் புரட்சிகரக் கட்டளைகள் கீழ்க்கண்டவாறு அமைந்து விட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1. சமயச் சார்பற்ற அரசில் பணிபுரியும் ஊழியர்கள் திருவெண்ணீறு, திருஉருத்திராக்கம், திருநாமம் அணியக்கூடாது!

2. கடவுளர்களின் பெயர்களை வைத்துக்கொண்டிருக்கும் ஊழியர்களை அரசு அங்கீகரிக்காது!

3: அரசு ஊழியர்களல்லாத மற்ற மதாபிமானிகள், திருவெண்ணீறு, திருநாமம் திருஉருத்திராக்கம் அணிந்து கொள்ளவும் தங்கள் வீடுகளில் கடவுளர் படங்களை வைத்து பூசை செய்யவும் அரசடமிருந்து முன்னராகவே 'லைசென்சு' பெற வேண்டும்!

4. இன்னும் இதைப் போன்று பல உத்தரவுகள்!

(நம் நாட்டிலே அநேகமாக எல்லாப் பண்டங்களுக்கும் வரிகள் விதித்தாகி விட்டன, விபூதி, குங்குமம், உருத்திராக்கம் இவைகள் இன்று வரியில் இருந்து தப்பித்திருக்கின்றன!) இந்தக் கட்டளைகளைப் படித்த வாசகர்கள் சற்றே சிரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை! நாத்திகக் கும்பல்கள் பெருகப் பெருக நாடு சரிக்கும் விதிகளும் தோன்றத்தானே செய்யும்

இவ்வாறு 'புரட்சிகரக்' கட்டளைகள் தோன்றுமோவென்று அச்சம் ஏற்படுவதற்குக் காரணங்களும் நம்மிடையேதான் இருக்கின்றன என்றால் பொய்யாகாது.

மதாபிமானம் கொண்ட பெருவாரியான நம்மில், விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரே மதக்கொள்கைகளைப் பின் பற்றி, சமயச் சின்னங்களான திருவெண்ணீறு, திருஉருத்திராக்கம், திருநாமம், குங்குமம் ஆகியவற்றை அணியும் நற்பழக்கத்தை கைக்கொண்டுள்ளார்கள். நம் சமயாசாரத்திற்கு, கலாச்சாரத்திற்கு உன்னதச் சின்னங்களாகத் திகழும் இவைகளை மதாபிமானம் கொண்ட பெரும்பான்மை மக்கள் அணிவதில்லை. முஸ்லிம் அன்பர்கள் போன்றும் கிருத்தவ அன்பர்கள் போன்றும் நம்மில் பலர் தோற்றமளிப்பது மிகவும் வருந்தக் கூடிய நிலையேயாகும் என்றால் மிகையாகாது.

சமயத் திருச்சின்னங்களைத் தவறாது அணிந்துவரும் சிறு எண்ணிக்கையிலுள்ள மதாபிமானிகளை மாற்றும் நிலை எளிதாக அமைந்து விடுகிறது.

இந்த நிலை நீடித்தால் வருங்காலத்தில் நம் குழந்தைகளுக்கு நம் கலாச்சாரத்தைப் பற்றிய அறிவும் அக்கறையும்

இல்லாமல் போய்விடும். திருவெண்ணீறு, திருநாமம், திரு உருத்திராக்கம் குங்குமம் என்றால் என்னவென்று புத்தகத்தைப் புரட்டும் படியான துரதிருஷ்ட நிலைக்கு நம் வருங்கால சந்ததியினர் ஆளாகி விடுவார்கள்!

நம்மை நாடிவரும் வெளி நாட்டவருக்கு ஆன்மீக. கலாச்சார அறிவை வழங்க நாம் நம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டும்.

தமிழக கவர்னர் அறிவுறுத்தியபடி நமது புராதனமதக் கோட்பாடுகளை இயன்ற அளவில் பின் பற்றி நமது கலாச்சாரங்களைப் பலவழிகளிலும் பாதுகாக்க முயற்சி எடுத்துக் கொள்வோம்.

ஆண்டவனை விட அடியார்க்குப் பெருமை அதிகம்; அடியாரைவிட அவர் அணிந்துள்ள திருச்சின்னங்கள் பன்மடங்கு பெருமை பெறுகின்றன. திருச்செந்தூரா என்று நினைத்து திருவெண்ணீறும் திருஉருத்திராக்கமும் அணிவோம் திருவேங்கடரமணா என்று நினைத்து திருநாமம் அணிவோம். இவற்றைத் தவறாது அணிந்து இன்பம் பெறுவதோடு நில்லாமல் கண்களை இமை காப்பதுபோல் நமது கலாச்சாரங்களைக் காக்க நாம் உறுதி எடுத்துக்கொள்வோம்.

''ஆலயம் தொழுவது பற்றி தி. மு. க. அரசின் கருத்து வேறுபட்டிருந்தாலும் சமூகத்தின் எப்பிரிவினர் மத உணர்வையும் புண்படுத்தும் எதனையும் தி. மு. க அரசு செய்யாது'' என்ற தமிழக முதல்வரின் உறுதிமொழியை உன்னுங்கால் திருவெண்ணீறுக்கும், திருஉருத்திராக்கத்திற்கும் திருநாமத்திற்கும் ''லைசென்சு முறை'' சமீபகாலத்தில் தோன்றாது என முடிவு கொள்ளலாம், மதாபிமானிகளின் மனம் புண்படும் படியான அசம்பாவிதச் செயல்கள் இனி எங்கும் நடைபெறா என நம்பி ஆறுதல் அடைவோம்.

———

# தொழும்பு

திரு: பொன்; நாகமலை அவர்கள்,
கொண்டயம்பாளையம்

தொழில் (சரியை)

தினமும் எழுதுகிறோம், உழைக்கிறோம், நெற்றிவியர்வை நிலத்தில் விழப் பாடுபடுகிறோம். கோழி கூவ எழுதுகிறோம், கோட்டான் கூவப்படுக்கிறோம். இவையெல்லாம் எதற்காக? நம் குடும்பத்தைக் காப்பதற்காக; மனைவி, மக்கள், தாய், தந்தையர், உற்றார், உறவினர், மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக எலும்பும் ஒடிய என்று சொல்லும் அளவுக்கு வருந்தி உழைத்து நம்குடும்பத்தை பாதுகாக்கிறோம். அவரவர் குடும்பத்தை பாதுகாப்பதற்காக எல்லோரும் உழைக்க வேண்டியதே, உழைத்து வரும் ஊதியத்தைக் கொண்டு நம் மனைவி, மக்கள் சுகப்படும்போது, அவர்கள் மகிழ்ச்சியடையும் போது நமக்கு உழைத்த வருத்தமெல்லாம் பறந்துவிடுகிறது. நாமும் அந்த மகிழ்ச்சியில் பங்கு கொள்கிறோம். ஆகையால் யாவரும் உழைக்க வேண்டியதே, உழைக்காமலிருப்பது பாவமும் கூட, ஆனால் நாம் என்னதான் உழைத்தாலும், பாடு பட்டாலும் அது நம் குடும்பத்தை மட்டும் காப்பதாயிருந்தால், நம் சுற்றதார்களை மட்டும் பேணுவதாயிருந்தால், அதற்குப் பெரியோர்கள் அளிக்கும் மதிப்பு குறைவுதான். அந்த உழைப்பை தொழில், என்றுதான் பெரியோர்கள் குறிப்பிடுகிறார்கள். நாம் வெளியூருக்குப் போகும் போது நம்மை முன்பின் காணாத ஒருவர் நம்மை பற்றிக் கேட்பது, என்ன தொழில் செய்கிறீர்கள் என்பதுதான். நாம்இந்த உலகத்துக்கு வந்திருப்பது, வாழ்வது, இல்லறம் நடத்துவது எல்லாம் இந்தத் தொழில் செய்வதற்கு மட்டும்தானா? என்றால் பெரியவர்கள் அல்ல என்றுதான் சொல்கிறார்கள். நம்முடை அன்பு, மனைவி, மக்கள் உற்றார் உறவினர்கள் என்ற இந்த வட்டத்

துக்குள்ளேயே இருப்பதற்குத்தானு? இதற்குத்தானு? நாம் இந்த உலகத்திற்கு வந்திருப்பது. நமது, என்ற இந்த வட்டத்திற்கு மட்டும் உழைத்துத் தொழில் செய்ய நாம் வரவில்லை. நம்முடைய அன்பு இந்த குறுகிய வட்டத்துக்குள் மட்டும் தேங்கி நிற்காமல், தடுத்து அணைபோடாமல், நான், எனது என்னைச் சேர்ந்தவர்கள் என்றும் நம்மைச் சுற்றி நாமே அமைத்துக் கொண்ட வேலிக்குள் நம் அன்பு சுற்றிச் சுழலாமல் நம் அன்பு நம் வேலிக்கு வெளியிலும் பரவ வேண்டும் அப்படி நம் அன்பு பரவ வேண்டுமானுல் நாம் செய்யும் இந்தத் தொழிலை இன்னும் மேல் நிலைக்குக்கொண்டு வரவேண்டும். அப்படி நம்தொழிலை மேல் நிலைக்குக்கொண்டு வரும் போது, நம் அன்பு விரிந்து பரவுகிறது. நாம் உழைக்கும் நேரத்தில் ஒரு பகுதியையோ, உழைப்பின் ஒரு பகுதியையோ, அல்லது உழைத்து வந்த ஊதியத்தில் குறிப்பிட்ட பகுதியையோ பிறர்க்கு வழங்கும் போது, ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கும் போது நாம் செய்யும் தொழிலுக்கும் பெயர் மாறிவிடுகிறது.

**தொண்டு (கிரியை)**

அதைத் தொண்டு என்று மேலோர் குறிப்பிடுவர். தொண்டு செய்பவரைத் தொண்டர் என்றும் கூறுகிருர்கள். இப்போது நம் தொண்டு ஒரு சமூகத்துக்கோ, நாட்டுக்கோ. அல்லது சமயத்துக்கோ இருந்தால். சமூகத் தொண்டு, நாட்டுத் தொண்டு, சமயத் தொண்டு என்றும், தொண்டு செய்பவரை, சமூகத் தொண்டர், நாட்டுத் தொண்டர், சமயத் தொண்டர் என்றே அழைக்கிறேம். இப்போது நம் அன்பு குடும்பம், உறவினர் என்னும் குறுகிய வட்டத்தை விட்டு, சமூகம்நாடு, என்று விரிவடைகிறது. இப்படி ஒருசமூகத்தின் அளவுக்கோ, ஒரு நாட்டின் அளவுக்கோ, அன்பு விரிந்தால் மட்டும்போதாது,குடும்பம் என்னும் சிறிய வட்டத்தைவிட்டு சமூகம், நாடு, என்னும் பெரிய வட்டத்துக்கு உயர்ந்திருக்கிறேம்: அவ்வளவுதான். இன்னும் நம் அன்பு மேலும் மேலும் விரிவடைந்து, மனிதன் முதற்கொண்டு எல்லா உயிர்களுக்கும் நம் தொண்டு பரவவேண்டும். உலகம் பூராவும்

அன்பு சென்று தழுவினால் நம் அன்பு அருளாக மாறி விடுகிறது.

''அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதி யாரிருந்தார்''

என்று சேக்கிழார் பெருமான் திலகவதியாரைப் பற்றிக் குறிப்பிடுவது போல நம்தொண்டின் மூலம் உலகம் பூராவும் அருள் பரவவேண்டும். அதற்காக நாம் இன்ன நேரம் இன்னநாள், இன்னவர் என்று பாராமல், எந்த நேரத்திலும் யார்க்கும் சமயம் கிடைத்தபோதெல்லாம் நல்வினையாற்ற வேண்டும்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாஞ் செயல். (குறள்)

இப்படி அறவினைகளைச் செய்யும்போது என்னதான் விழிப்புடன் செய்தாலும் தவறி விடுவோம். நாம் மனிதர்கள்தானே தவறு செய்வது இயற்கைதான். நம் தவற்றினால் சில உயிர்களுக்குத் தீமை ஏற்படலாம். பல உயிர்களுக்கு நன்மை ஏற்படலாம். அப்போது நாம் நன்மை செய்வதுடன் தீமையும் செய்தவர்களாவோம். ஆசை யப்பட்டு பட்டம் பதவி முதலியவைகளின் மேலும்நாட்டம் ஏற்பட்டு அதனால் தீமைசெய்தவர்களாவோம். ஆகையால் இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு இவைகளிலிருந்து நாம் விடுபட முடிவதில்லை. இவைகளிலிருந்து நாம் விடுபட வேண்டுமானால் நாம் செய்யும் பணிகளை ஆண்டவனை நினைந்து செய்யவேண்டும். எப்பணி அல்லது தொண்டு செய்தாலும், நாட்டுப்பணியோ, சமூகப்பணியோ அல்லது பிற உயிர்களுக்குச் செய்யும் தொண்டோ எதைச் செய்தாலும் இறைவனை நினைந்து செய்யப்படுமானால் அதிலுள்ள நன்மை தீமைகள் நம்மைச் சாராத தொண்டு செய்தவர்களாவோம். இப்படி ஆண்டவனை நினைந்து செய்யும்பணி அல்லது தொண்டின் மதிப்பு மேலும் ஒருபடி உயருகிறது. அப்படி உயரும்போது பெயரும் மாறி விடுகிறது.

**திருத்தொண்டு (யோகம்)**

இப்பொழுது நம் தொண்டுக்கு திருத்தொண்டு என்றும் அதைச் செய்பவர்களுக்குத் திருத்தொண்டர் எனவும் பெயர்

வருகிறது. ஆண்டவனை நினைந்து பிற உயிர்களுக்குச் செய்யும் தொண்டும், அவன் அடியார்களுக்குச் செய்யும் தொண்டும் ஆண்டவனுக்கே செய்யும் தொண்டும், தொண்டு என்று வெறுமனே சொல்லாமல் திரு என்ற அடைமொழி சார்த்தித் திருத்தொண்டு என்று சொல்கிறோம். நாயன்மார்கள் தங்கள் தொழிலையே இந்த முறையில், தொண்டாக மாற்றித் திருத்தொண்டு என்னும் நிலைக்கு உயர்த்தி ஆண்டவனைக் காணும் நிலையை அடைந்தார்கள், இந்தத் திருத்தொண்டினால் ஆண்டவனை அடைய முடியுமா என்றால் இன்னும் இறைவனை அடைய முடியாது என்றுதான் சொல்ல வேண்டும் திருத்தொண்டு செய்வதன் மூலம் நம் எண்ணம், சொல், செயல் எல்லாம் ஆண்டவனை நோக்கி இப்போதுதான் திரும்பியிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். இன்னும் நாம் இந்த உலகத்துக்கு வந்த காரியம் பூர்த்தியாக வில்லை. நாம் இந்த உலகத்தில் பிறவியெடுத்ததன் பயன் பூர்த்தியடைய வேண்டுமானால், இறைவனைக் காணவேண்டுமானால், திருத்தொண்டு இடைவிடாது செய்து செய்து உறைப்புப் பெறவேண்டும், இறைவனைத் துதித்தால் மட்டும் போதாது நாத்தழும் பேறத் துதிக்கவும் வேண்டு என்றபோல, திருத்தொண்டு இடைவிடாது செய்து செய்து தொழும்பாக வேண்டும். தொழும்பு என்றால் அடிமை நிபந்தனையற்ற அடிமை ஆண்டவனுக்கு நாம் ஆகிவிட வேண்டும் அவனுக்கே அடிமையாகி எல்லாப் பொறுப்புக்களையும் அவனிடமே ஒப்புவித்து பற்றற்ற நிலையில் எல்லாம் உன் செயலாவதன்றி என் செயலாலாவது ஒன்றுமில்லை என்று திருத்தொண்டு செய்தால், திருத்தொண்டு மேலும் உயருகிறது அப்படி உயரும் போது அதன் பெயரும் அதைச் செய்பவர்களின் பெயரும் மாறி மேலும் மதிப்புப் பெறுகிறது.

தொழும்பு (ஞானம்)

அவர்கள் செய்யும் திருத்தொண்டுக்கு தொழும்பு, என்றும் செய்பவர்களுக்கு தொழும்பர், என்றும் பெயர் வருகிறது. இதுவே கீதையின் கர்மயோக மென்பதும் காரியம் செய் ஆனால் அதன் பயனை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விடு. என்று கீதை கூறுகிறது. இப்படி எல்லாம் உன் செயல்

என்று விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், வேண்டுதல் வேண்டாமை என்னும் இருமைகளற்று அவனுக்கே அடிமையாகி தன் இச்சை வழியின்றி அவன் இச்சை வழியே. என் கடன்பணிசெய்து இருப்பதே என்றும் இல்லாமல் என்கடன் பணிசெய்து கிடப்பதேஎன்ற அப்பர் பெருமான் வாக்குப்படி அந்நிலையில் திருத்தொண்டு செய்யும் நிலைக்கு வந்து விட்டால் அதுதான் தொழும்பு அல்லது ஞானநிலையென்றும், அப்படிச் செய்பவர்களைத் தொழும்பர் அல்லது ஞானி என்றும் நூல்கள் கூறுகின்றன. இதுதான் ஆண்டவனைக் காணும் நிலை, அவனையடையும் நிலை.

> "தொழும்பனு ருரைத்த போதிற்
> சோதியா யெழுந்து தோன்ற"

என்று இளையான்குடி மாறனார் புராணத்தில் சேக்கிழார் பெருமானும்,

> "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன்
> உருவங்கண்டு தூங்கார் தொழும்பு செய்யார்"

என்று அருணகிரிப் பெருந்தகையர், கந்தரலங்காரத்திலும்.

> "போக்குவாய் என்னைப் புகுவிப்பாய்
> நின் தொழும்பில்"

என மணிவாசகப் பெருமானாரும் குறிப்பிடுகிறார்கள், யார் பற்றுக்களை விட்டுத் தொழும்பு செய்கிறார்களோ அவர்கள் தான் அகந்தைக் கிழங்கை வேரோடு பறிக்க முடியும். ஆணவத்தை அகற்ற முடியும். அகந்தையை அகற்றியவர்கள்தான் ஆண்டவனைக் காணக்கூடிய ஞானத்தை அடைகிறார்கள். குமரகுருபர அடிகளார், அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே என்பார். சித்தாந்த முறைப்படி ஆராய்ந்தாலும். தொழில் சரியை என்றும், தொண்டு கிரியை என்றும். திருத்தொண்டு-யோகம் என்றும் தொழும்பு-ஞானம் என்றும் கொள்ளலாம். எனவே நாம் பரம் பொருளை அடைய இந்த உலகத்துக்கு வந்த காரியம் முற்றுப் பெற எல்லையில்லாத பேரானந்தப் பெருங் கடலை அடைய. நம் தொழிலைத் தொண்டாகமாற்றி, தொண்டைத் திருத்தொண்டாக உயர்த்தி அதைத் தொழும்பு என்னும் நிலைக்குக் கொண்டு வந்து, இந்த உலகத்திற்கு வந்த பயனை அடைவோமாக.

---

சிவ சிவ]

# சிவமுருகா 108 வாழ்த்துப் போற்றிகள்

திரு. A. K. கோவேந்தராசன் அவர்கள்
கல்லாவி அஞ்சல், தருமபுரி மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| | ஓம் | சரவணபவாய | வாழ்க |
| | ,, | சண்முகன்தாள் | ,, |
| | ,, | எந்நேரமும் நெஞ்சில் நீங்காதான் தாள் | ,, |
| | ,, | தணிகைத் தலமேவும் தயாநிதியாம் தாள் | ,, |
| | ,, | செந்தூர் தனி லுறையுந் தேசிகன் தாள் | ,, |
| | ,, | வள்ளிமலை யுறையும் வள்ளலடி | ,, |
| | ,, | பழனி மலை யிவர்ந்த பரமனடி | ,, |
| | ,, | சுவாமிமலை வந்த அறனடிகள் | ,, |
| | ,, | கதிர் காமச் சோதிக் கந்தனடி | போற்றி |
| 10 | ,, | நீலக் குறத்தி மணாளனடி | ,, |
| | ,, | தெய்வயானைப் பதிச் சுந்திரத்தாள் | ,, |
| | ,, | அண்டாண்ட மெங்கும் நிறைந்தானடி | ,, |
| | ,, | முப்பாழுக் கப்பாலா யிருந்தானடி | ,, |
| | ,, | அப்பன் நெற்றிக்கண் வந்தோய் | ,, |
| | ,, | சரவணப் பங்கயந் தவழ்ந்தாய் | ,, |
| | ,, | அறுவர் வளர்த்த அறுமுகா | ,, |
| | ,, | வீரவாகு தன் அண்ணா | ,, |
| | ,, | நவ வீரருக்கும் முதியோய் | ,, |
| | ,, | இலக்கத் தொன்மர்தம் துணைவா . | ,, |
| 20 | ., | பிரமனோம் பொருள் கேட்டோய் | ,, |
| | ,, | சங்கரன் மகிழச் சொன்னோய் | ,, |
| | ,, | யென்றும் மயிலூர் பிரணவா | ,, |
| | ,, | தேவர்கள் துயரைக் கேட்டாய் | ,, |
| | ,, | சத்தியாம் வேலைப் பிடித்தோய் | ,, |
| | ,, | சூரனாதியர்களைத் துணித்தாய் | ,, |
| | ,, | தேவர் தம் துயரைக் களைந்தாய் | ,, |
| | ,, | இன்ப துன்ப மிலானே | ,, |
| | ,, | ஆகம வேதித முடிவே | ,, |
| | ,, | கரந்த பால் கன்னலென யிருந்தாய் | ,, |
| 30 | ,, | ஆன்ம நேய குரவே | ,, |
| | ,, | வேண்டுவார் பிறப்பறுக்கும் வித்தகா | ,, |
| | ,, | வேதங்கள் தேடும் ஒப்பிலாய் | ,, |
| | ,, | நம்பிராசன் மருகனே | ,, |
| | ,, | நம்பினோர்க் கின்னமுதானாய் | ,, |

,, நாட்ட மூன்றுடைய ஞதனே ,,
,, அடைக்கலம் புகுவோ ரன்பனே ,,
,, அபய கரத்தெம் மண்ணலே ,,
,, தவக் கடல் வடிவத் தத்துவா ,,
,, ஆறெழுத் தோதுவோர் துணைவா ,,
,, அறுபதியமர்ந்த அண்ணலே ,,
,. வேதமா வாக்கிய வத்தா ,,
,, ஐம்பத்தோ ரக்கரமானுய் ,,
,, நாதவிந்து வடிவே ,,
,, பார்பதியாள் தருபாலா ,,
,, வேதமந்திர சொருபா ,,
,, அறுபத்து நான்கு கலை வதீதா ,,
,, சித் பிரகாசச் சிவனே ,,
,, அடியார் சிந்தையி லூறும் அமுதமே ,,
,, தெவிட்டா துளத்துத் தேனே ;;
,, புன்புலா லாக்கைக் கோயிலாய் ,,
,, ஐம்பொறி புலன்களுக் கெட்டாய் ,,
,, நித்திய நின்மல நிரஞ்சனு .,
,, சத்திய சிற்சபைத் தலைவா ,,
,, சாக்கிர சொப்பன வதீதா ,,
,, துரியங் கடந்த சோதியே ,,
,, வெளியி லொளி தரும் மூவா ,,
,, தவத்தோர் சந்திர சூரியா ,,
,, மூலாதாரத் தெழுகனலே ,,
,, மதி மண்டடத் தமுதானுய் ,,
,, சச்சி தானந்தக் கடலே ,,
,, காரண காரிய மானுய் ,,
,, சத்தியும் சத்தனு மானுய் ,,
,, குறு முனிக்கருளிய குகனே ,,
,, ஆழ்ந்த கன்ற துண்ணியா ,,
,, முத்தனே சித்தனே முதல்வா ,,
., வள்ளிக் கொடிபடர் மலையே ,,
,, பன்னிரு கண்களுடை யாய் .,
,, பாசம் வேறறுக்கும் பரமனே ,,
,, இன்னிசை வீணை யினுதமே ,,
,, தமிழாங் கடலின் தலைவா ,,
,. சைவ சமய நாதா ,,
,, அம்பொன் மணியே அரசே ,,
,. தெய்வக் களிற்றின் மணுளா ,,
,, சச்சி தானந்த வொளியே ,,

,, ஏழ்நிலைச் சிகரச் ஜோதியே ,,
,, ஞான பண்டித சுவாமியே ,,
,, அருட்பெரும் சோதி அத்தா ,,
,, தனிப் பெருங் கருணைத் தயாநிதியே ,,
,, சிவசிவ அரகர தேவா ,,
80 ,, தெரிசன பரகதி யானாய் ,,
,, தேவ சேனாபதியே ,,
,, படைத்தலாந் தொழில் தனக்கதிபா ,,
,, மனவாக்கினிற் கெட்டாய் ,,
,, ஆராவமுதே அப்பா ,,
,, மரகத வடிவ வள்ளலே ,,
,, விழுப் பொருள் விளக்கும் வேந்தே ,,
,, முப்பாழுங் கடந்த முதல்வா ,,
,, ஆருயிர் நிறைந்த அறிவே ,,
,, வேடனாய் வந்த வித்தகா ,,
90 ,, வேங்கை மரமாய் நின்றாய் ,,
,, கருஉரு தன்னில் அருஉருவே ,,
,, காரிருள் விளக்கும் பேரொளி ,,
,, கண்டங் கரியான் மகனே ,,
,, கற்பகத் தருவின் கனியே ,,
,, காண்பான் காட்சிக் கெட்டாய் ,,
,, பூவினி லுறையும் பொலிவே ,,
,, தத்துவா தீதத்தலைவா ,,
,, பரமானந்தப் பழமே ,,
,, நுண்ணிய நூலினறிவே ,,
,, பக்தி வலையிற் படுவோய் ,,
,, முத்தி வடிவ முதலே ,,
,, அத்திக் கிளைய வரசே ,,
,, அன்பின் வடிவப் பொருளே ,,
,, மண் புனல் வளியெரி வெளியே ,,
,, மாயா சகித நகிதா ,,
,, பிறப் பிறப் பில்லா முத்தனே ,,
,, போற்றியாம் என்னை யாட்கொள்வாய் ,,
108 ,, போற்றி போற்றி ஓம் பிரணவா போற்றி ,,

முருக வாழ்த்துப் போற்றிகள் (108) தமிழில் செய்து கொடுங்கள் என்று எமது குருநாதர் பச்சையப்ப சுவாமிகள் தமிழ் ஆசிரியர் அவர்களை வேண்டிய போது, முருக வாழ்த்துப் போற்றிகள் ஆக்கித் தந்தார்கள் இதனை எம்மால் தினம் தினம் முருகன் பேரில் வாழ்த்தி போற்றி துதி செய்து வருகிறேன். இதனால் தமிழில் சிவமுருகன் பேரில் வாழ்த்தும் 108 போற்றிகள் இல்லை யென்ற குறை நீக்கப்பெற்றேன். மற்றும் தமிழன்பர்கள் இதனை வாழ்த்திப் போற்றி துதித்துப்பயனடையலாம்.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

# நவக்கிரக தோத்திரம்

## சூரியன்

காசினி இருளை நீக்கும் கதிரொளி யாகி எங்கும்
பூசுரர் உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை நல்கும்
வாசி ஏழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா! எனைரட் சிப்பாய்; செங்கதி ரவனே! போற்றி!

## சந்திரன்

அலைகடல் அமுதந் தன்னில் அன்றுவந் துதித்து மிக்க
கலைவளர் திங்க ளாகிக் கடவுளோர்க்(கு) அமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறையாய் மேரு
மலைவல மாக வந்த மதியமே! போற்றி! போற்றி!

## செவ்வாய்

வசனநல் தைரி யந்தான் மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ர மங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவர வர்க்கு நீணிலந் தன்னில் நல்கும்
குசநில மகனுஞ் செவ்வாய் குரைகழல் போற்றி! போற்றி!

## புதன்

மதனநூல் முதலா வுள்ள மறைகளும் கல்வி ஞானம்
விதமுடன் அவர வர்க்கு விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன்பவிசு பாக்கி யங்கள் சுகம்பல கொடுக்க வல்லன்
புதன்கவிப் புலவன் சீர்மால் பூங்கழல் போற்றி! போற்றி!

## குரு

மறைமிகு கலைநூல் வல்லோன்; வானவர்க்(கு) அரசன் மந்திரி
நறைசொரி கற்ப கப்பொன் நாட்டினுக்(கு) அதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மன்றல் நீடுபோ கத்தை நல்கும்
இறையவன் குருவி யாழன் இணையடி போற்றி! போற்றி!

## சுக்கிரன்

மூர்க்கவான் சூரன் வாணன் முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழைபெய் விக்குங் கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்கவா னவர்கள் போற்றச் செத்தவர் தமைஎ ழுப்பும்
பார்கவன் சுக்ராச் சாரி பாதபங் கயமே போற்றி!

### சனி

முனிவர்கள் தேவர் ஏனை மூர்த்திகள் முதலா னோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மகிமைஅல் லால்வே றுண்டோ?
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே! காகம் ஏறும்
சனியனே! உனைத்துதித்தேன் தமியனேற்(கு) அருள்செய்வாயே

### இராகு

வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்(கு) அமுதம் ஈய
ஏகிநீ நடுவி ருக்க இருசிர மற்று வெய்ய
பாகுசேர் மொழியாள் பங்கன் பரன்கையில் சிரமே பெற்ற
ராகுவே! உனைத்து தித்தேன் ரட்சிப்பாய்; ரட்சிப் பாயே.

### கேது

மாதுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்(கு) அமுதம் ஈயும்
போதுநீ நடுவி ருக்கப் புன்சிர மற்று வெய்ய
தீதில்சேர் கதிர் விளங்கச் சிவன்கையில் சிரமே பெற்ற
கேதுவே! உனைத்து தித்தேன்; கீர்த்தியாய் ரட்சிப் பாயே.

### பொது

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியன் ராகு கேது கடவுளர் ஒன்பான் நாமத்
தாரியல் சக்க ரத்தைத் தரித்திரர் பூசித் தாலும்
பாரினில் புத்திரர் உண்டாம்; பாக்கியம் பெறுவர் தாமே.

## கருணைக்கு ஒரு உருவம்

தமிழ்ச் செல்வி
11. A. ராஜு நாய்க்கன்தெரு
சென்னை–33

கருணைக்கு ஒரு உருவம் கந்தன்
மனக் கவலையைத் தீர்ப்பதில் மன்னன்
நினைத்ததை முடிப்பதில் வீரன்
என்றும் அருளை வாரிக் கொடுப்பதில் சூரன்
நெஞ்சில் நிம்மதியைத் தருவதில் அழகன்
செய்த குற்றங்களை மறப்பதில் கோமகன்
குணத்தில் அவன் ஒரு குழந்தை
இந்த அண்டத்தில் எதற்கும் அவன் தந்தை
உயர்வென்றும் தாழ்வென்ற பேதம் அவன் உள்ளத்தில்
ஒரு போதும் இல்லை
என்றும் தேடி வருவோர்க்கெல்லாம் அவன் தன்னையே
அளிக்க மறுப்பதில்லை
கனிக்காக மலை ஏறி நின்றான்
வள்ளி என்னும் கன்னிக்காக வனம் நாடிச்சென்றான்
தீராத வினையெல்லாம் தீர்க்கின்றான்
என்றும்–எவரும் காட்டாத அன்பையெல்லாம் காட்டுகின்றான்.

## ஸ்ரீகாசியில் குமாரசுவாமி மடத்தில் 72–ஆவது அன்னம்பாலிப்பு நிதி-ரூ. 1,000/-

ஸ்ரீகாசியில் நம் குமாரசுவாமி மடத்தில் பூசை செய்யும் கிருஷ்ணமூர்த்தி அய்யர் அளித்த தொகை ரூ. 1,000/-ரூபா ஆயிரத்தைக் கொண்டு ஷெ யார்விருப்பப்படி அவர் பாரியாள் அம்மாளு அம்மாள் பெயரில் ஆண்டு தோறும் ஆனி மாதம் சுக்லபக்ஷம் சதுர்த்தியில் ஒரு நாள் மட்டும் அந்தணர்களுக்கு அதிகப்படி அன்னம்பாலிப்பு நடத்துவித்தற் பொருட்டு இத் தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 32-ஆவது தருமமாக நிறுவப் பெற்றது. இது 'காசியில் குமாரசுவாமி மடத்தில் 72-ஆவது அன்னம்பாலிப்பு நிதி' எனப்பெயர் பெறும்,

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 1,000/- ரூபா ஓராயிரம்/. இது ஆண்டொன்றுக்கு 7-3/4% வட்டி தரக் கூடிய நீண்டகால முதலீடாக 61 மாதங்களுக்குக் கும்ப கோணம் ஸ்டேட் பாங்கில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். 560424 தேதி. 8-10-1973, ரூ. 1,000/-. இது நம்மாலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசி மடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையினின்றும் இத்தருமத்தைப் பரிபாலனம் செய்வதற் குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகையில் ரூ. 70/- மட்டும் ஆண்டுதோறும் ஆனி மாதம் சுக்லபக்ஷம் சதுர்த்தியில் ஒருநாள் மட்டும் நம் குமாரசுவாமி மடத்தில் நாடோறும் நடத்தப் பெற்று வருகிற நித்தியப்படி அன்னம் பாலிப்புடன் சேர்த்து அதிகப்படி அந்தணர்கட்கு அன்னம் பாலிப்பு நடத்தச் செலவிடப் பெற்று வரும்.

4. இத்தொகை வட்டி வரவிற்கேற்பக் கூட்டவும் குறைக்கவும் பெறும். இவ்வன்னம் பாலிப்பு நம்மால் தயாரிக்கப் பெறும் திட்ட ஜாப்தாவின்படி நடத்தப் பெற்று வரும்,

5. இவ் வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப் பின்வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்துவரும். இம்மூதற் பொருள் திருப்பியளிக்கப் பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய அரசியல் கடன்தாள் களிலோ நீண்டகால முதலீடுகளிலோ முதலீடு செய்யப் பெற்று வரும்.

"நகரமாய் மறைச் சிகரமானதால்
மகரமாயினுன் நிகரில் காசியே"

– ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்.

Tirupanandal
8—10—1973 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Tiruvidaimarudur Sub-Registrar's Office on 10—10—1973 as document No. 31/73 Book-4. Volume 59 Pages 139 to 140

# திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில்

## நித்திய மகேசுவரபூசை இரண்டாவது உதவி நிதி

## முதற்பொருள்-ரூ. 10,000/-

திருப்பனந்தாளில் ஸ்ரீகாசிமடம் நிறுவப் பெற்ற நாள் **முதல்** இதுகாறும் ஸ்ரீகாசிமடத்தில் ஸ்ரீகாசிமடத்து அதிபர்**களால் வழிவழி** நடத்தப் பெற்று வருகிற நித்திய மகேசுவர பூசையைத் தொடர்ந்து நடத்துவித்தற் பொருட்டு நம்மால் 4-7-1973-ந் தேதி ஒரு உதவிநிதி ஏற்படுத்தப் பெற்றுள்ளது அங்ஙனமே திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் நம்மால் நடத்தப் பெற்று வரும் நித்திய மகேசுவரபூசை நடத்துவதற்கு உதவியாக இம்முதற் பொருள் நம்மால் **திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21-ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் 34-ஆவது** தருமமாக நிறுவப் பெற்றுள்ளது. இது **''திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் நித்திய மகேசுவரபூசை இராண்டாவது உதவி நிதி''** எனப்பெயர் பெறும்.

**2.** இதற்குரிய முதற்பொருள் ரூ 10,000/-/ ரூபாய் பத்தாயிரம்/. இது ஆண்டொன்றுக்கு 7-3/4% வட்டி தரக்கூடிய நீண்டகால முதலீடாகக் கும்பகோணம் இந்தியன் பாங்கில் 61 மாதங்களுக்கு 10-8-1973-ல் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. பிக்சட் டெபாசிட் எண். 179977-ரூ. 5000/- எண். 179978- ரூ. 5000/- ஆக ரூ 10,000/- இது நம்மாலும் நமக்குப்பின் வரும் காசிமடத்து அதிபர்களாலும் பரிபாலனம் செய்யப் பெற்று வரும்.

**3.** இம்முதற் பொருளினின்று ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டித் தொகையில் இந்த பரிபாலனம் செய்வதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகை முழுவதும் நாடோறும் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தில் நம்மால் நடத்தப் பெற்று வரும்.

**4.** இவ் வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் செலவு செய்யப் பெற மாட்டாது.

5. இம்முதற் பொருள் நம் பேரிலும் நமக்குப்பின் வரும் ஸ்ரீகாசிமடத்து அதிபர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் திருப்பிபளிக்கப் பெற்றதும் அதிக வட்டி வரக்கூடிய நீண்டகால முதலீடுகளிலோ அரசியல் கடன் தாள்களிலோ முதலீடு செய்யப் பெற்று வரும்,

''மண்ணில் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய் வித்தல்''

Tirupanandal
25—3—1974 } (Sd.) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the e Tiruvidaimarudur Sub-Registrar's Offic 26—3—1974 on document No. 3 of 1974 Book-4, Volume 59 Pages 167to 169,

உ

சிவ சிவ

சொக்கலிங்கம் துணை

# திருக்குற்றாலத்தில் தேவார கோஷ்டி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது.

**8—4—74 திங்கட்கிழமை பிரமாதீச பங்குனி 26-ம்உ**

**திருமுறைவாணர்கள்:-**

1 தேவார இசைமணி திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.

2 தேவார இசைமணி திரு. கல்யாணசுந்தர தேசிகர்
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், கும்பகோணம்.

3 திரு. G. சுப்பிரமணியம்
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருக்குற்றாலம்.

4 திரு. சி. கோதண்டபாணி வேய்ங்குழல், நாகர்கோயில்.

5 திரு. S. முத்தப்பா ஆசாரி மிருதங்கம், நாகர்கோயில்.

அ. சீத்தாராமன் B. A., B. L.
செயல் அலுவலர்
திருக்குற்றாலநாத சுவாமி
தேவஸ்தானம்,
திருக்குற்றாலம்.

By Order of His Holiness
K. M. Venkataramiah M. A.
Manager, Sri Kasi Mutt
Religious Charities Tirupanandal.

---

# பழைய பாபநாசத்தில் அன்னம்பாலிப்பு

**14-4-74 ஞாயிற்றுக்கிழமை ஆனந்த சித்திரை 1-ம் உ**

ஸ்ரீ பாபநாச சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சித்திரை விஷுப் பெருவிழாவில் அகத்தியருக்குத் திருமணக் கோலக் காட்சியளிக்கும் திருநாள் ஆகிய ஆனந்த ௵ சித்திரை மீ 1-ம் உ (14—4—74) ஞாயிற்றுக்கிழமை திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் அன்னம் பாலிப்பு நடத்தப்பெறும்.

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

திருச்சிற்றம்பலம்

சம்பந்தர்: திருக்குற்றாலம்: பண்-குறிஞ்சி

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கை
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பால் நெய்யோ டாட லமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள் 1

பொடிகள் பூசித் தொண்டர்பின் செல்லப் புகழ்விம்மக்
கொடிக ளோடும் நாள்விழ மல்கு குற்றாலம்
கடிகொள் கொன்றை கூவிள மாலை காதல்செய்
அடிகள் மேய நன்னகர் போலும் அடியீர்காள். 2

செல்வ மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும் பீனும் குற்றாலம்
வில்லி னொல்க மும்மதில் எய்து வினைபோக
நல்கு நம்பான் நன்னகர் போலும் நமரங்காள். 3

மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்
இலையார் சூலம் ஏந்திய கையான் எயில் எய்த
சிலையான் மேய நன்னகர் போலும் சிறுதொண்டீர் 4

கைம்மா நீலக் கண்ணியர் சாரல் மணிவாரிக்
கொய்ம்மா எனல் உண்கிளி ஒப்பும் குற்றாலம்
கைம்மா வேழத் தீருரி போர்த்த கடவுள் எம்
பெம்மான் மேய நன்னகர் போலும் பெரியீர்காள் 5

நீல நெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோல மஞ்ஞை பேடையொ டாடும் குற்றாலம்
காலன் றன்னைக் காலாற் காய்ந்த கடவுள்ளெம்
சூல பாணி நன்னகர் போலும் தொழுவீர்காள் 6

போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்கும் குற்றாலம்
மூதூர் இலங்கை முட்டிய கோனை மிறைசெய்த
நாதன் மேய நன்னகர் போலும் நமரங்காள் 7

அரவின் வாயின் முள்ளெயிறேய்ப்ப அரும்பீன்று
குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்
பிரமன் னோடு மாலறி யாத பெருமையெம்
பரமன் மேய நன்னகர் போலும் பணிவீர்காள். 8

மாடவீதி வருபுனற் காழியார் மன்னன்
கோட லீன்று கொழுமுனை கூம்பும் குற்றாலம்
நாட வல்ல நற்றமிழ் ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பாடநம் பாவம் பற்றறுமே. 9

திருச்சிற்றம்பலம்

சுசீந்திரத்தில் ஸ்ரீதாணுமாலய சுவாமி தேவஸ்தானத்தில்

# சித்திரைத் திருவிழா தேவார கோஷ்டி

கன்னியாகுமரி ஆச்சிராமம் திருப்பனந்தாள்

## திருமுறை அன்னம்பாலிப்பு வகையரு நிதியின்படி

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ
**காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்**
அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப் பெறுவது

**30—4—74 முதல் 2—5—74 முடிய**

**திருமுறை வாணர்கள்:**

1 தேவார இசை நம்பி திரு. S. கல்யாணசுந்தர தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், கும்பகோணம்.

2 தேவார இசைமணி திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.

3. திரு. M. சுவாமிநாத தேசிகர்,
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், சுசீந்திரம்.

4. திரு. சி. கோதண்டபாணி, வேய்ங்குழல், நாகர்கோவில்.

5. திரு. S. முத்தப்பா ஆசாரி, மிருதங்கம், நாகர்கோவில்.

---

குறிப்பு: ஷை ஓதுவார்கள் 3—5—74௨ கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் திருமுறைப்பணி செய்வார்கள்.

---

சுசீந்திரத்தில் சித்திரைத் திருவிழாவில்

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப் பெறும் தருமங்கள்**

1. சுசீந்திரம் கோயிலில் சித்திரைத் திருவிழாவில் (25—4—74)௨ 3–ம் திருநாள் மண்டகப்படி
2. ஷை சித்திரைத்திருவிழாவில் ஆச்சிராமம்ஸ்ரீகாசிமடத்தில் பிராமண போஜனமும், மகேசுவர பூஜையும்.
3. ஷை திருவிழாவில் வேதபாராயணம்.
4. 8,9,10–ம் திருவிழா நாட்களில் தேவாரத் திருமுறை கோஷ்டி.
5. ஷை திருவிழாவில் தேவாரப் பாடசாலை ஆண்டு விழாவில் பேச்சாளருக்கும், தேவார மாணவர்க்கும் பரிசளிக்க ரூ. 100.

ஸ்ரீ காசிமடம் :: திருப்பனந்தாள்

சிவ சிவ

## குமரித் தீர்த்தம்

### (அப்பர்)

திருச்சிற்றம்பலம்

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலும் மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானுமென நினைந்தார்க் கெளிதே யாகி
அழல்வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே.

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்தும் உருவிப் போகக்
குறியிலறு குணத்தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே.

அங்கமாய் ஆதியாய் வேத மாகி
அருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகிப்
பால்மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமாய் ஏறூர்ந்த செல்வ னாகி
எழுஞ்சுடராய் எம்மடிகள் நின்ற வாறே:

திருச்சிற்றம்பலம்

# திருப்பூந்துருத்தியில்
# அப்பர் நினைவு அன்னம்பாலிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின்வண்ணம் நடத்தப்பெறுவது

**18-4-74** வியாழக்கிழமை ஆனந்த ஸ்ரீ சித்திரை மீ 5உ

சிவம் பெருக்கும் திருவாமூரில் அவதாரம் செய்தருளித் திருவதிகை வீரட்டானேசுவரரால் சூலை நோய் தீர்ந்து நற்றமிழ் பாடி நாவுக்கரசு எனும் நாமம் பெற்றவரும், சமணர்செய்த வாதனைகளை வென்று பல்லவ அரசனைச் சைவனாக்கியவரும், சம்பந்தரால் அப்பர் என்று அழைக்கப்பெற்றவரும், மறைக்கதவினைத் திறத்தல் முதலிய அற்புதங்களைச் செய்தவரும், திருப்பூந்துருத்தியில் திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் அமைத்தவரும், சிவத் தலங்கள் தோறும் உழவாரத் திருப்பணி புரிந்து பதிகமேழெழு நூறு பகர்ந்து சித்திரைச் சதயத்தில் திருப்புகலூரில் சிவனடி அடைந்தவருமாகிய திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநக்ஷத்திர நாளில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் திருப்பூந்துருத்தியில் அப்பர் திருமடத்தில் ஆனந்த ஸ்ரீ சித்திரைச் சதய நாள் 18-4-74 வியாழக்கிழமை நண்பகலில் ஏழைகளுக்கு அன்னம்பாலிக்கப்பெறும்.

ஆணைப்படி.

ஸ்ரீ காசி மடம்
திருப்பனந்தாள்.

S. முருகேசம் பிள்ளை
காறுபாறு
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

---

## திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னம்பாலிப்பு

23—4—74 செவ்வாய்க்கிழமை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21ஆவது அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் ஆனந்த ஸ்ரீ சித்திரைமீ 10-உ 23-4-74 செவ்வாய்க்கிழமை நண்பகல் திருச்செங்காட்டங்குடியில் திரு S. சுப்பையா முதலியார் அவர்கள் மேற்பார்வையில் சைவர்களுக்கு அன்னம் பாலிக்கப்பெறும்.

ஸ்ரீ காசிமடம் :: திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

நுண்ணியான் மிகப்பெரியான் ஓவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நம் தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங் குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான் கணபதீச் சரத்தானே.

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி அடிகளையே அடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

எனக்கென்றும் இனியானை எம்மான் தன்னை
எழிலாரும் ஏகம்பம் மேயான் தன்னை
மனக்கென்றும் வருவானை வஞ்சர் நெஞ்சில்
நில்லானை நின்றியூர் மேயான் தன்னைத்
தனக்கென்றும் அடியேனை ஆளாக் கொண்ட
சங்கரனைச் சங்கவார் குழையான் தன்னைப்
புனக்கொன்றைத் தாரணிந்த புனிதன் தன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்திக் கண்டேன் நானே.

நேர்ந்தொருத்தி ஒருபாகத் தடங்கக் கண்டு
நிலைதளர ஆயிரமா முகத்தி னோடு
பாய்ந்தொருத்தி படர்சடைமேல் பயிலக் கண்டு
படவரவும் பனிமதியும் வைத்த செல்வர்
தாம்திருத்தித் தம்மனத்தை ஒருக்காத் தொண்டர்
தனித்தொருதண் டூன்றிமெய் தளராமுன்னம்
பூந்துருத்தி பூந்துருத்தி என்பீ ராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்க லாமே.

திருச்சிற்றம்பலம்

---

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணையின்வண்ணம் நாடோறும் திருச்செங்காட்டங்குடியில் உத்திராபதியீசுவரருக்குப் பச்சைக்கற்பூரப் பொட்டுச் சாத்தப்பெற்று வருகிறது,

# மூன்றும் திருமுறையின்

## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

64 திருப்பெருவேளூர் பண்: பஞ்சமம்

அண்ணாவும் கழுக்குன்றும் ஆயமலை அவைவாழ்வார்
விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள்செய்வார்
கண்ணாவார் உலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே.

பொழிப்பு: அண்ணாமலையும் கழுக்குன்றமும் ஆகிய மலைகளில் வாழ்பவரும், தேவரும் மக்களும் வியப்புற்றுத் துதித்தால் அவர்க்கு அருள் செய்பவரும் உலகத்து உயிர்கட்குக் கண்ணாக உள்ளவரும், கருத்தானவரும், திரிபுரத்தை எரித்த பெருமானாரும், பெண்ணும் ஆணும் ஆகின்ற உருவமுடைய பெருமானாரும் ஆகிய சிவபெருமான் திருப்பெருவேளூர் என்னும் தலத்தை விட்டுப் பிரியமாட்டார்.

ஞானசம்பந்தர் திருவாஞ்சியம் தலையாலங்காடு என்ற தலங்களை வழிபட்டபின்பு திருப்பெருவேளூர் சென்று இறைவனைப் பணிந்து இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைப் பாடவல்லவர்க்கு அருவினை நோய் சாரமாட்டா.

65 திருக்கச்சிநெறிக் காரைக்காடு பண்: பஞ்சமம்

வாரணவு முலைமங்கை பாங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே.

பொழிப்பு: மேகம் பொருந்திய அழகிய மாடங்களாகிய அங்காடி நிறைந்த செழித்த காஞ்சிபுரத்தில் நீர் நிறைந்த மலர்ப் பொய்கைகளையுடைய திருநெறிக்காரைக்காடு என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், கச்சு பொருந்திய மார்பினையுடைய உமாதேவியை ஒரு பங்கில் உடையவராய்க் கங்கையில் போர் பொருந்திய மழுப்படை ஒன்றை ஏந்தி வெண்மையான திருநீற்றைப் பூசுவார்.

அணவுதல்-பொருந்துதல்; வெண்பொடி-திருநீறு; கார்-மேகம்; கலி-செழிப்பு; கச்சி-காஞ்சிபுரம்-இது ஊரின் பெயர்;

நெறிக் காரைக்காடு-இது கோயிலின் பெயர். கச்சியில் உள்ள நெறிக்காரைக் காட்டார் பங்கினராய் ஏந்தி அணிவர் என முடிக்க. ஞானசம்பந்தர் காஞ்சிபுரத்தில் ஏகம்பத்தை வழி பட்டபின் நெறிக்காரைக்காடு சென்று இறைவனை இறைஞ்சி இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தைப் பாடவல் லவர் பரலோகத்தில் இருப்பார்.

**66 திருவேட்டக்குடி** பண் : பஞ்சமம்

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை
விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக்
காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத்
துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளம்
தெண்டிரைக்கள் கொணர்ந்தெறியும்
திருவேட்டக் குடியாரே.

பொழிப்பு: வண்டு ஒலிக்கும் கொன்றை மலரை அணிந்த விரிந்த சடையின் மேல் வரிகளையுடைய பாம்பையும், இரு ஓரமும் சுருங்கி வளைந்த பிறையையும் சூடிய தலையினை யுடைய கபாலியாகிய சிவபெருமான் எவ்விடத்துள்ளாரோ எனில், (அடியார்கள்) ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளைத் தெப்பமாக இணைத்துக் கட்டித் தொழுது வணங்கும்படியாக ஒளிவிளங்கும் நீரில் வளரும் நெருப்புப் போல்சிவந்த பவளங் களைத் தெளிந்த அலைகள் கொண்டுவந்து கரையிலே எறி கின்ற திருவேட்டக்குடியில் உள்ளார்.

இரைக்கும்-ஒலிக்கும்; கண் திரைக்கும்-இரண்டு ஓரமும் சுருங்கிய; காபாலி-பிரமகபாலத்தை ஏந்தியவன்; கனைத்தல்-ஒலித்தல்; கழல்கள்-கழல் அணிந்த திருவடிகள்; தொண்டி ரைத்து என பதைத் தொள் திரைத்து எனப்பிரிக்க. தொள் என்பது அம் சாரியை கெட்டு நின்றது. தொள்ளம்-தெப்பம். திரைத்தல்-ஒன்றுசேர்த்துக்கட்டல். சுடர்ப்பவளம்-தீச்சுடர் போன்ற சிவந்த பவளம், தெள்திரைகள்-தெளிந்த அலைகள். ஞானசம்பந்தர் திருப்பறியலூரை வழிபட்ட பின் கடற்கரை யை அடைந்து பலபதிகளை வணங்கி வரும்போது திருவேட் டக்குடிக்கு வந்து இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதி கத்தை உணர்ந்து ஏத்த வல்லவர் வானவரோடு உயர்வானத் தில் இருப்பார்.

**67** திருப்பிரமபுரம் பண்: சாதாரி

சுரருலகு நரர்கள்பயில் தரணிதலம்
முரணழிய அரணமதில்முப்
புரமெரிய விரிவுவகை சரவிசைகொள்
கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையின் நிரைநிறைகொள்
வருசுருதி சிரவுரையினால்
பிரமனுயர் அரனெழில்கொள் சரணஇணை
பரவவளர் பிரமபுரமே.

**பொழிப்பு:** தேவரது உலகமும் மக்கள் வாழும் பூமியும் தமது வலிமை கெடும்படி காவல் அமைந்த மதில்களாகிய முப்புரங்கள் ஒருசேரக் கலக்கும் வகையில் எரியுமாறு விரைவுள்ள அம்பு ஏந்திய கையையுடைய பரமனாகிய சிவபெருமான் தங்கியுள்ள இடம் யாதெனில், சுலோக நிரைகளால் நிறைவு கொண்ட வரன்முறைப்படி ஓதப்பட்டு வருகின்ற வேதத்தின் முடிவாகிய உபநிடத வாசகத்தினால் பிரமதேவனாவன் உயர்ந்த அரனுடைய அழகுகொண்ட திருவடியிணையைத் தனக்கு வரம் அருளும் பொருட்டு வழிபட்டு நிற்க அப்புகழால் வளர்கின்ற திருப்பிரமபுரம் என்னும் தலமாகும்.

சுரர்-சுரை என்ற பானம் பருகும் தேவர்; நரர்-மக்கள்; தரணி-பூமி; முரண்-வலிமை; அரண-காவலையுடைய; சரம்-அம்பு; நிரை-வரிசை; சுருதி-ஒலிவடிவான வேதம்; சுருதிசிரம்-வேதமுடிவான உபநிடதம்; அரன்-சிவன்; சரணம்-திருவடி. முப்புரம் விரவுவகை எரிய எனவும், விசைசரம் எனவும் நிரைநிறைகொள் வரன்முறையின் வருசுருதி எனவும் சரணஇணை(யை) வரமருளப் பரவ எனவும் மாறிக் கூட்டுக. ஞானசம்பந்தர் சீர்காழியில் தங்கி இருந்து மூல இலக்கியமாகப் பாடியருளிய பதிகங்களில் இதுவும் ஒன்று. இப்பதிகம் மொழிவார்க்குத் தகுதியுடையன என்பதனால் தகுதியான எல்லாப்பலனும் இப்பதிகத்தை மொழிவார்க்கு உண்டாகும் என்பது குறிப்பு.

உ
சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

| எண் | நூல் | ரூ. | பை. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | ,, சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | ,, மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | ,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | ,, மூலம் ... | 0 | 10 |
| 13 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம் ... | 0 | 15 |
| 14 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 15 | கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 16 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 17 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 4 | 25 |
| 18 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 19 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 1 | 75 |
| 20 | திருவாசகம் (மூலம்) ... | 0 | 75 |
| 21 | திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்) ... | 3 | 50 |
| 22 | 9-ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 23 | ,, ,, தெளிவுரை ... | 1 | 50 |
| 24 | திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு ... | 2 | 50 |
| 25 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 2 | 50 |
| 26 | பேராயிரப் பனுவல்கள் ... | 0 | 10 |
| 27 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 28 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 29 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 30 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 31 | பழமொழித் திருமுறை ... | 0 | [illegible] |
| 32 | அப்பர்விழா வெளியீடு ... | [illegible] | [illegible] |
| 33 | Hymns and Proverbs ... | [illegible] | [illegible] |
| 34 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | [illegible] |

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.

Regd No. M. 5574 

35 குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் ... 0 30
36 கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ... 1 75
37 திருவாசகம் தேனும் கனியும் ... 0 15
38 தேவாரம் பாடும்பயன் ... 0 15
39 காசிக்கலம்பகம் உரை நடை ... 0 15
40 தாழைத் திருமுறை .. 0 15
41 ஐந்து நீதி நூல்கள் .. 0 10
42 நவக்கிரகமாண்பு .. 0 25
43 ஸ்ரீ சைலம் ... 0 10
44 திருவுசாத்தனக் கல்லெழுத்துகள் ... 0 37
45 திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி ... 0 10
46 செந்திலாண்டவன் மகிமை ... 0 15
47 திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) ... 2 00
48 திருமுருகாற்றுப்படை .. 0 15
49 தேவார வைப்புத்தல விளக்கம் ... 0 15
50 திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) ... 2 00
51 திருக்குறள் மூலம் ... 0 25
52 திருக்குறள்-அறத்துப்பால-சிற்றுரை .. 0 20
53 திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை
இலக்கணக் குறிப்பின் விளக்கம் .. 0 15
54 முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) .. 0 60
55 திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும்
ஹிந்தி மொழிபெயர்ப்பும் .. 1 50
56 திருக்குறள்-பொருட்பால் ,, ... 2 50
57 திருக்குறள்-காமத்துப்பால் ,, .. 1 00
ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் ... 4 00
58 கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம்
ஹிந்தி மொழிபெயர்ப்புடன் ... 1 25
59 திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் .. 1 00
60 சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் ... 3 00
61 அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) ... 0 50
62 மங்கலம் .. 0 20
63 திரு ஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் .. 0 20
64 கோதனத் திருமுறை .. 0 10
65 தோடுடைய செவியன் கோவண ஆடையன் ... 0 15
66 பண்டார மும்மணிக்கோவை உரை நடை ... 0 15
67 மகேசுவரபூசை ... 0 15
68 கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர் ... 0 10
69 திருவிசைப்பா தேனும் கனியும் ... 0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

**ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**

**"தியாகராஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு,

திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-600005

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் 628601 -74